பக்கங்கள்:- பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 02 | திங்கட்கிழமை (16.06.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 179

## எந்நேரமும் யுத்தம் வெடிக்கும் அபாயம்

# இந்திய இராணுவ உதவியை இலங்கை அரசு கோரியது!

## கடலில் புலிகளைக் கண்காணிப்பதில் இந்திய விமானம்

(நமது சிறப்பு நிருபர்)

**சர்வதேசக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்று இலங்கை கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை அரசு இந்திய அரசிடம் உடனடி உதவி கோரியுள்ளது. இதனை அடுத்து இந்திய விமானம் ஒன்று விடுதலைப்புலிகளின் கப்பல் போக்கு வரத்தை கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நடவடிக்கை எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்பதை உறுதிப்படுத்துவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.**

முல்லைத்தீவுக் கரையில் இருந்து 265 கடல் மைல் தூரத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் எண்ணெய்த் தாங்கி கப்பலான எம்.ரி. ஹோசின் நேற்று முன்தினம் காலை 7மணியளவில் இலங்கைக் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, இலங்கை அரசு இந்திய அரசின் உதவியை நாடியுள்ளது.

இலங்கை அரசின் கோரிக்கைக்கு இணங்க சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கடற்போக்கு வரத்து கப்பல்களைக்கண்காணிப்பு சோதனை இடுவதற்காக இந்தியா யுத்த விமானம் (10ம் பக்கம் பார்க்க)

## கல்லடியில் துப்பாக்கிச் சூடு ஈ.பி.டி.பி. உறுப்பினர் பலி

### கைக்குண்டுவீச்சில் 9 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் பிரதாப் என அழைக்கப்படும் பொன்னையா இராமச்சந்திரன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவர் ஆவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கி பிரயோகம் செய்ததுடன் (10ம் பக்கம் பார்க்க)

## எங்கள் தலைவனே ! பொறுத்தது போதும்

# விடுதலைப் போராட்டத்தை மீண்டும் தொடருங்கள்

## முல்லைத்தீவு மக்கள்பிரபாவுக்கு கடிதம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான எம்.ரி. ஹோசின் என்ற எண்ணெய்க் கப்பல் நேற்று முன்தினம் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முல்லைத் தீவு மாவட்ட கடலோர பிரதேச மக்கள், தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மனங்களெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எம் தலைவனே, நிதானத்தோடு எங்கள் வேண்டுதலை விடுக்கின்றோம். 27 ஆண்டு கால விடுதலைப்போரில் எமது மக்கள பட்ட துயரத்திற்கும் துன்பங்களிற்கும் ஓய்வு கொடுக்க நீங்கள் விரும்பியதை நாங்கள் அறிவோம். 17,800ற்கு மேற்பட்ட மாவீரர்களின் இலட்சியக் கனவுகளையும், 70,000 ற்கு மேற்பட்ட மக்களின் உயிர்களையும் இவர்கள் சிந்திய குருதியையும், கண்ணீரையும் உங்கள் உள்ளம் தாங்கி உறுதியோடு இருப்பதையும் நாங்கள் அறிவோம்.

எமது மக்களின் அமைதியான, நிம்மதியான, சுதந்திரமான வாழ்வுக்காய நோர்வேயின் அனுசரணையுடன் அரசியல் தீர்வு ஒன்றைக்காண முடியுமா என 16 மாதங்களாய் நினைத்ததனையும் நாங்கள் அறிவோம். புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் உலக நாடுகளுக்கு நாங்கள் பயங் (10ம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்களின் அ.அட்டையை படையினர் சுழிபுரத்தில் பறித்தனர் !

### மக்கள் ஆர்ப்பாட்டம்; இராணுவம் துப்பாக்கிச் சூடு எட்டுப் பொதுமக்கள் காயம்; பயணிகள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதிக்கு சென்ற விடுதலைப்புலிப்போராளிகளை வழிமறித்த இராணுவத்தினர் அவர்களை பலவந்தமாக சோதனை இட முற்பட்டதுடன் அவர்களின் அடையாள அட்டைகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இச் சம்பவம் நேற்று மாலை 5மணியளவில் சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலய வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

வழக்கம்பரை அம்மன் ஆலய வீதியால் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிப் போராளிகளை வழிமறித்த இராணுவத்தினர் அவர்களைச் சோதனை இட முற்பட்டனர். அதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்தபோது புலி உறுப்பினர்கள் வைத்திருந்த அடையாள அட்டைகளை பறிமுதல் செய்தனர்.

இதனை அடுத்து விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவ உயர் அதிகாரியை சந்தித்து விடயத்தை எடுத்துக் கூறியபோது இரு தரப்பிற்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இந் நடவடிக்கையை கேள்வியுற்ற பொதுமக்கள் சம்பவ இடத்திற்குச் சென்று படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். உடனடியாக அவ்விடத்திற்கு மேலதிக இராணுவம் குவிக்கப்பட்டதுடன் பொது மக்களை கலைந்து செல்லுமாறு படையினர் பணித்தனர்.



இதற்குச் செவி சாய்க்காது மக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது இராணுவத்தினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் (10ம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாயில் கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாயில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பெண்கள் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இத்தாக்குதலின்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 13ம் திகதி இரவு 11மணியளவிலும் இவ்வாறான கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதாகவும், எனினும் அக் குண்டு வெடிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

யுத்த அனர்த்தத்தால் பாதிப்படைந்து மீண்டும் புனரமைப்புக்காக காத்திருக்கும் யாழ்.திறந்தவெளி அரங்கத்தை முதலாவது படத்திலும், துரிதமாக புனரமைக்கப்பட்டுவரும் யாழ்.தபாலகத்தின் தோற்றத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- க.பவன்)

# டோக்கியோ மாநாட்டு நிதியை பயன்படுத்த நீண்டகால அவகாசம்

## நிதி அமைச்சர் சொக்ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த பெருமளவு நிதியை மீளச் செலுத்துவதற்கு 30-40 வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் நடைபெற்ற நிதி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு ஜப்பான் சென்ற அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ்,கே.என் சொக்ஸி ,மிலிந்த மொறகொட ஆகியோர் நேற்று முன்தினம் நாடு திரும்பிய சமயம் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிற்கு தமது பயணம் குறித்தும் டோக்கியோ மாநாட்டில் கிடைக்கப்பெற்ற நிதி குறித்தும் விளக்கம் அளித்தனர்.

டோக்கியோ மாநாட்டு நிதி குறித்து நிதியமைச்சர் மேலும் கூறுகையில் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு தயவுக் காலமாக 10 வருடங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும்,

அத்துடன் இம் மாநாட்டில் கிடைத்த நிதியில் குறிப்பிடப்பட்ட அளவு நன்கொடையாகவே கிடைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இம்மாநாட்டில் எதிர்பாராத அளவுக்கு பெருமளவு நிதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. என்றும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள நிதியில் கடனாகப் பெற்ற நிதியைத் திருப்பிச் செலுத்தும்போது குறைந்த வட்டியே அறவிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

(க-1)

## போலி ஆவணங்களைக் காட்டி

# பாடசாலைகளில் தம் பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோருக்கு எதிராக நடவடிக்கை

### *பாடசாலைகள் மேன்முறையீட்டு ஆணையாளர் எச்சரிக்கை*

(கொழும்பு)

போலி ஆவணங்களைக் காட்டி பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்கும் பெற்றோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பாடசாலைகள் மேன்முறையீட்டுக்குழு ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் போலி ஆவணங்கள், மற்றும் தவறான வதிவிட அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டி பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்க்கும் நடவடிக்கையில் பெற்றோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகரிலேயே இச்சம்பவங்கள் கூடுதலாக காணப்படுவதாகவும் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது முறையற்றது என்றும் சம்பந்தப்பட்ட பெற்றோருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# முல்லைத்தீவு கப்பல் தாக்குதல் சம்பவம் அறிக்கை இன்று வெளியாகலாம்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்து விசாரணைகள் நடத்தி வருகின்றது.

இதேவேளை கண்காணிப்புக் குழுவின் ஊடகப் பேச்சாளர் அக்னஸ் டோட்ரயர் இதுபற்றி ஊடகம் ஒன்றிற்குக் கருத்துக் கூறுகையில்,

சம்பந்தப்பட்ட இக்கப்பல் கரையோரத்தில் இருந்து 110 கடல் மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்ததாக இலங்கைக் கடற்படை கூறுகின்றது.

இதேசமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் ''இக்கப்பல் 260 கடல் மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்ததாக அிறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய முரண்பாடான கருத்துக்கள் இருதரப்பில இருந்தும் வெளியிடுவதால் தொடர்ந்தும் கண்காணிப்புக் குழு சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்தி வருகிறது.

எவ்வாறாயினும் இது தொடர்பான அறிக்கை ஒன்றை இன்று வெளியிட தாம் முயற்சிகள் மேற்கொள்வதாகவும் க்ண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(க-10)

## ஒரு வாரகாலத்துள் கடவுச்சீட்டு பெற ஏற்பாடு

(கொழும்பு)

சாதாரண சேவையில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர் ஒரு வாரத்திற்குள் அதனைப் பெறுவதற்கான ஏற்பாட்டினை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரே நாளில் கடவுச்சீட்டு பெற விண்ணப்பிப்போருக்கு ஒரு மணித்தியாலத்திற்குள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கடவுச்சீட்டை ஒரு வாரத்திற்குள் பெற குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதால் கடவுச் சீட்டை பெறுவதற்கு அவசரமாக தரகர்களை நாட வேண்டாம் என மேற்படி திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)


உங்கள்

வலம்புரியின் வாரமலர்




- டோக்கியோ கலை அரங்கில் நடனம்:- ரணில்; கடம்:- பீரிஸ்
- கண்காணிப்புக் குழு மீண்டும் சந்திப்பு
- வியாசரின் பதில்
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- ஆலடி மாநாடு
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை...)

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில்

சங்குநாதம்

விலை 14/

# அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க விசேட கூட்டம் இன்று

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று விசேட கூட்ட ஒனறை கொழும்பில் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டநிலையிலேயே இந்த விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின்ஊடகப் பேச்சாளர் உதித்தகேரர் இதுபற்றி கருத்துவெளியிடுகையில்; கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று நண்பகல் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் கடந்த 4நாட்களாக மேற்கொண்டுவந்த போராட்டத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவித்தார். (க-10)

# இலங்கை மின்சார சபை ஊழியர் இன்று வேலை நிறுத்தப்போர்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த 24 தொழிற்சங்கங்கள் இன்று அடையாள வேலை நிறுத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இன்று காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் சம்பள உயர்வு உட்பட மூன்று கோரிக்கைகளை இவர்கள் முன் வைத்து போராட்டத்தை நடத்தவுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை,இன்று நடைபெறவிருக்கும் இப்போராட்டத்தினால் அலுவலக நடவடிக்கைகள் மின் கட்டணங்களை ஏற்றுக் கொள்ளுதல், பழுது பார்த்தல் போன்ற செயற்பாடுகள் எதுவும் இன்றைய தினம் நடைபெறாது என தொழிற் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தா. (க-10)

# அமைச்சர் கொடித்துவக்கு இன்று மட்டு. நகர் விஜயம்

(கொழும்பு)

கல்வி மற்றும் மனிதவள அமைச்சர் கலாநிதி கருணா சேன கொடித்துவக்கு இன்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜ சிங்கத்தின் அழைப்பினை ஏற்று அங்கு செல்ல விருப்பதாக கூறப்படுகின்றது.

தமது விஜயத்தின்போது புனித மைக்கல் தேசிய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள விருப்பதுடன் ,அமைச்சர் கொடித்துவக்கு பின்னர் மட்டக்களப்பில் உள்ள வேறும்பல கல்லூரிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். (க-8)

# போதைப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க விசேட கண்காணிப்பு இயந்திரங்கள்

## கேந்திர இடங்களில் பொருத்த ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்குள சட்டவிரோதமான முறையில் போதைப்பொருட்களை கடத்தி வரும் நடவடிக்கைகளை தடுக்கும் போருட்டு துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்; போதைப் பொருட்களை கடத்தி வரும் நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தை வகிப்பதாக தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை குறித்து தீவிர கவனம் செலுத்தி வருகிறோம்.

இதேவேளை, இலங்கையில் போதைப் பொருட்களைக் கடத்தி வருவது குறித்து ஆராய்வதற்கு என நியமிக்கப்பட்ட விசேட குழுவும் கண்காணிப்பு இயந்திரங்களைப் பொருத்துமாறு பரிந்துரை செய்துள்ளது.

தற்போது இலங்கைக்குள் கடத்தி வரப்படும் போதைப் பொருட்களில் 10 சதவீதமாவையே கண்டு பிடிக்கப் படுகிறது. அத்துடன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 40 சதவீதமானவர்கள் போதைப பொருட்களுக்கு அடிமையானவர்கள் என்றும் குறிப்பிட்டார். (க-10)

# சுயாதீன நிதி ஆணைக்குழுவின் தலைவராக அசோக குணவர்த்தன

(கொழும்பு)

அரசாங்கம் அமைக்கவிருக்கும் சுயாதீன நிதி ஆணைக்குழுவின் தலைவராக அசோக குணவர்த்தன நியமிக்கப்படவுள்ளார்.

சுயாதீன நிதி ஆணைக்குழுவின் தலைவராக டிபிடி சில்வாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும் அப்பொறுப்பை தன்னால் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்தே குணவர்த்தனவிற்கு அப்பொறுப்பு வழங்கப்படவுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக எம். சி.எம்.பெரேரா மற்றும் ஏ. சக்திவேல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-8)

# குடியுரிமைத்திருத்த சட்ட மூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வாழும் நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் வகையிலான குடியுரிமை திருத்தச் சட்டமூலம் ஒன்று சென்ற வாரம் அமைச்சரவையில் சமர்பிக்கப்படடுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்; மேற்படி திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் நாடற்றவர்களாக இருக்கும் இந்திய வம்சாவழியினரிற்கு விரைவில் பிரஜா உரிமை கிடைக்கும் என்றார். (க-10)

# படையினர் -புலிகள சந்திப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தற்போது இடம் பெற்று வரும் கைதுகள் ,ஆட்கடத்தல் தொடர்பாக படையினருக்கும் புலிகளுக்குமிடையிலாக சந்திப்பொன்று இன்று திங்கட்கிழமை வவுணதீவு பிரதேசசெயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரிய, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் ,அரசியல் துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-10)

# அடையாள அட்டைகள் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வலலைச்சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியால் செல்லும் பயணிகளின் தேசிய அட்டைகள் மற்றும் விசேட அடையாள அட்டைகளை சோதனையிடுவதாக பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பயணிகள் விசேட அடையாள அட்டைகளைத் தம்முடன் எடுத்துச்செல்லவேண்டியுள்ளதாக பயணிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# குளிக்கச்சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

அனுராதபுரம் குமரவிபக் குளத்தில் குளிக்கச்சென்ற இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவருடன் குளிக்கச் சென்று நீரில் மூழ்கிய மற்றுமொருவரை பாதுகாப்புப்பிரிவினர் காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்டவர் அனுராதபுர வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் கந்தளாய்ப் பகுதியைச்சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப் படுகிறது. (க-10)

## பருத்தித்துறை

# வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு தொலைபேசி இணைப்பு வசதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை, வித்தியாலயத்திற்கு தொலை பேசி இணைப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

வித்தியாலயத்தின் செயற்பாடுகளை இலகுபடுத்தி வித்தியாலய அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாகவே இத்தொலைபேசி இணைப்புப் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளதாக வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளைத் தலைவரும் இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளருமான வீ. எஸ். ஏகாம்பரநாதன் தெரிவித்தார்.(க-52)

# விடுதலைப்புலிகளும் உபகுழுவும் மட்டக்களப்பிற்குவிஜயம் செய்வர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு சம்பந்தப்பட்ட பிரதேசங்களை தமிழீழ விடுதலைப்புலிகளும் உபகுழுவும் நேரில் சென்று பார்வையிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உபகுழுக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மண்முனை வடக்கு,ஆரையம்பதி, காத்தான்குடி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில்,தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் றெஜினோல் தலைமையிலான குழுவினரும் முஸ்லிம்கள் தரப்பில் சமாதான செயலக இணைப்பாளர் ஐ.எல். எம். பொபிதீன் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

அடுத்த உபகுழுக்கூட்டம் எதிர் வரும் யூலை மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. (க-10)

# மினுவாங்கொட நகர சபை தலைவர் இடை நிறுத்தம்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்திலுள்ள மினுவாங்கொட நகர சபைத்தலைவர் நியூட்டன் குல சூரியவை தலைவர் பதவியிலிருந்து இடை நிறுத்துவதாக மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட்குறே அறிவித்துள்ளார்.

நியூட்டன் குல சூரிய மீது எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவரை இடை நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர சபைச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாகவும் கடமை நேரங்களில் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதாகவும் நியூட்டன் குல சூரிய மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மேலும், இக்குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்யவென ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேல் மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (க-8)

## பிராந்தியப் போக்குவரத்துக் கம்பனி

# நட்ட ஈடு இழப்பானது கடந்த ஆண்டில் மிக அதிகம்


## மத்திய வங்கி அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

பிராந்திய போக்குவரத்துக் கம்பனிகளின் செயற்பாட்டு இழப்புக்கள் கடந்த ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கடந்த ஆண்டு மேற்படி கம்பனிகளுக்கு ஏற்பட்ட இழப்பு 218 கோடி ரூபாவாகும். கடந்தவருடம் பஸ் கம்பனிகளின் பிரயாண தூர அட்டவணைகளில் 397 கோடி கிலோமீற்றார் தூரம்பதிவு செய்யப்பட்டு மொத்த வருமானமாக 920 கோடி ரூபாவினைப் பெற்றிருந்தபோதும் நடைமுறைச்செலவு 116கோடி ரூபாவாக அதிகரித்துள்ளமையினால் இந்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு பிரதான காரணமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குகுழு தயாரித்த சம்பள மீளமைப்பை அமுல் படுத்தாமை மற்றும் சலுகைக்கட்டணத்தில் பருவ கால பயணச்சீட்டுக்கள் வழங்கப்படாமை,இலாபம் தரக்கூடிய பாதைகளில் பஸ்களை கூடுதலாக அமர்த்தாமையுமே என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-10)




பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் பெரியார்களைக் கௌரவிக்கும் விழாவிலே, கௌரவிக்கப்பட்ட கலாபூசணம் திருமதி கோபாலசாமி ஏற்புரை நிகழ்த்துவதையும், கலாநிதி ஏ.சோமசுந்தரம் பிள்ளைக்கு யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜ சுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். படம்: (பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# திறமைக்குப் பாராட்டு!

ஒருவர் ''பரிசு'' கொடுத்தார் என்றால் என்ன அர்த்தம்? இன்னொருவருடைய திறமையைப் பாராட்டி அவர் ஏதோ ஒன்றைக் கொடுத்தார் என்று அர்த்தம். நம்முடைய திறமையைப் பாராட்டி இன்னொருவர் நமக்கு ஏதாவது கொடுத்தால் அது தான் பரிசு! அப்படி இல்லாமல் நாமே ஒருவரிடம் போய் நின்று,''எனக்கு இன்ன இன்ன திறமை இருக்கிறது... எனக்கு ஒரு பரிசு கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கக்கூடாது. பரிசு என்பது இன்னொருவர் வழங்குவதே தவிர நாமாக வாங்குவதல்ல.

ஆனால், இப்போது நடைமுறையில் அது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. அதனாலே தான் நாமும் அதை அப்படியே சொல்ல ஆரம்பித்து விட்டோம். ''இதோ இருக்கிறாரே... இவர் தான் இந்த வருஷம் முதல் பரிசு வாங்கினார்'' என்று தான் சொல்கிறோமே தவிர இவருக்குத்தான் முதல் பரிசு வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்வதில்லை. பரிசு வாங்கியவரிடம் இதைப்பற்றிக் கேட்கப்போனால்,''அவர்கள் வழங்கவில்லை... அதனால் நானாகக் கேட்டு வாங்கிக் கொண்டேன்'' என்பார். நியாயமான பரிசு என்பது எது? பரிசு பெறுபவருக்கும் அதற்குரிய திறமை இருக்கவேண்டும். பரிசு வழங்குபவருக்கும் இந்தத் திறமையைப் புரிந்து கொள்கிற ஆற்றல் இருக்கவேண்டும். இது எப்பொழுதும் எல்லா இடத்திலும் சரியாக அமைந்து விடுவதில்லை . அதனாலே தான் சிக்கல்!

ஒரு பெரிய இராஜா இருந்தார். அவரின் ஊரில் யாரோ ஒரு பெரிய வித்தைக்காரன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டார். உடனே அவனை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார். அவனும் இராஜா கூப்பிடுகிறார் என்றவுடன் புறப்பட்டு அரண்மனைக்கு வந்தான். ''உனக்கு என்னென்ன வித்தைகள் தெரியும்?'' என்று கேட்டார் இராஜா. ''மன்னா! எனக்கு மந்திர வித்தைகள் எதுவும் தெரியாது. ஆனாலும் ஒன்று இரண்டு வேடிக்கைகள் செய்வேன்'' என்றான். ''அப்படி எனனென்ன தெரியும் என்று கேட்டார் இராஜா''

கயிற்றின் மேல் நடப்பேன். நீளமாக ஒரு மூங்கிலை நட்டு வைத்து, அதில் தலைகீழாக ஏறி உச்சிக்குப்போவேன். அதன் நுனியில் வயிற்றை வைத்துக்கொண்டு சக்கரம்போல் சுற்றுவேன்! சின்ன வளையத்துக்குள்ளே புகுந்து வெளியே வருவேன். நாலு கால்களால் மாடு நடப்பது மாதிரி நடப்பேன். மாடு மாதிரியே கத்துவேன்... ஒரே தடவையில் ஒன்பது குட்டிக்கரணம் போடுவேன் என்று மிகவும் அடக்கமாகச் சொன்னான் அந்த வித்தைக்காரன்.

இராஜாவுக்கு மிகவும் சந்தோசம். உடனே ''அப்படியா? சரி... வருகிற வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு நீ இங்கே வா! நமது அரண்மனைக்கு எதிரில் உள்ள மைதானத்தில் உன்னுடைய வித்தையைக் காட்டு... நமது ஊர் ஜனங்களும் அதை பார்த்துச் சந்தோஷப்படட்டும்'' என்றார். சரி மகாராஜா! என்று சொல்லிவிட்டு அவன் போய் விட்டான்.

அடுத்த வெள்ளிக்கிழமை. சரியாக 4.00 மணிக்கு வித்தை ஆரம்பமாயிற்று. ஒரு பெரிய சிம்மாசனத்தில் உட்கார்ந்து இராஜா வித்தையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். பொதுமக்கள் நிறையப்பேர் சுற்றி உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வித்தைக்காரன் ஒவ்வொரு வித்தையாகச் செய்து காட்டிக் கொண்டிருக்கிறான். மாடு மாதிரி நடிக்க ஆரம்பித்தான். ''ம்மா...ம்மா'' என்று மாடு மாதிரிக் கத்திக் கொண்டே சுற்றிச்சுற்றி வந்தான். அப்பொழுது அந்தக் கூட்டத்திலே இருந்த மாடு மேய்க்கிற சின்னப்பையன் ஒருவன்,ஒரு சின்னக்கல்லை எடுத்து அந்த வித்தைக்காரன் முதுகிலே லேசாகப் போட்டான். அடுத்த வினாடியே அந்தச் சிறுவன் சபாஷ் என்று சொல்லிப் பாராட்டவும் செய்தான்.

வித்தைக்காரனும் ''ஏன் என் முதுகிலே கல்லைப் போட்டாய்'' என்று கோபப்படவில்லை! அவனுக்கும் சந்தோஷம். வித்தைகள் எல்லாம் முடிந்தன. எல்லோரும் கைதட்டினார்கள். இராஜா அவனை அருகில் கூப்பிட்டார். ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அதன் பின்னர் அந்த மாடு மேய்க்கிற சின்னப் பையன் ஓடி வந்தான். தன்னுடைய தோளில் கிடந்த ஒரு கிழிந்த கம்பளியை எடுத்து அந்த வித்தைக்காரனுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

அந்த வித்தைக்காரன் இராஜா கொடுத்த முத்து மாலையை விட, இந்தப் பையன் கொடுத்த கிழிந்த கம்பளியைத்தான் பெரிதாக நினைத்தான். அதைக் கண்ணிலே ஒத்திக்கொண்டான். அந்த மாடு மேய்க்கிறவன் காலைத்தொட்டுக் கும்பிட்டான். இராஜாவுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. வித்தைக்காரன் விபரத்தைச் சொன்னான்.

''மகா இராஜா ! இந்தச் சின்னப் பையன் தான் என்னுடைய திறமையை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறான். நான் மாடு மாதிரி நடித்தபொழுது, ஒரு சின்னக்கல்லை எடுத்து என் முதுகிலே போட்டான். மாட்டின் உடம்பில் ஏதாவது பட்டால் உடனே அது அந்த இடத்தை மட்டும் சுளிக்கும். இந்தப் பையன் கல்லைப் போட்டபொழுது நான் அது மாதிரியே கல் பட்ட இடத்தை மட்டும் சுளித்துக் காட்டினேன். அதைப்பார்த்து விட்டுத்தான் சபாஷ் என்று சொன்னான். அதனாலேதான் அவன் கொடுத்தது கிழிந்த கம்பளமாக இருந்தாலும் என்னுடைய திறமையைப் புரிந்து கொண்டு கொடுத்ததனால் அதுதான் எனக்குப் பெரிதாகத் தெரிகிறது'' என்று சொன்னானாம்.

அந்தக்காலத்து இராஜா இதைக்கேட்டதும் உடனே கோபப்படவில்லை! அந்தச் சின்னப்பையனைக் கூப்பிட்டார். அவனுக்கும் ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அர்த்தமுள்ள பாராட்டு - பரிசு என்றால் அது இது தான்! மற்றவைகள் சும்மா!

பாராட்டுக்களில் இன்னொரு வகை உண்டு. ஒரு பெரியவர் ஒரு விருந்துக்குப் போனாராம். சாப்பிடுவதற்கு முன்னரே ''ஆகா... விருந்துச் சாப்பாடு என்ன ருசி! என்ன சுவை! மிகவும் பிரமாதம்! இது மாதிரி என் வாழ்நாளிலேயே சாப்பிட்டதில்லை!'' என்று பாராட்டினாராம். என்ன ஐயா! இன்னும் சாப்பிடவே இல்லை. அதற்குள் பாராட்டிவிட்டீர்கள்? என்று மற்றவர்கள் கேட்டார்கள். அதற்கு இவர்,சாப்பிட்டதன் பின் பாராட்டமுடியுமோ, இல்லையோ சொல்ல முடியாது. அதனால்தான் முன்னமே பாராட்டி விட்டேன் என்று அதற்கு விளக்கம் கொடுத்தாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

தோழர் சுபத்திரனின் படுகொலைக்கு

# பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் தகுந்த பதில் தர வேண்டும்

### அம்பாறை மாவட்ட ஈ. பி. ஆர். எல். எவ். பொறுப்பாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

ஈ.பி.ஆர். எல்.எவ்.(வரதர் அணி) இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தம்பிராசா சுபத்திரனின் படுகொலைக்கு பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் போன்றோரே முழுமையான உத்தரவாதத்தையும் பதிலையும் தரவேண்டும்.

இவ்வாறு ஈ.பி.ஆர். எல். எவ். அமைப்பின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் இராசையா துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு- கிழக்கில் கடந்த ஒன்றேகால் வருடத்திற்குள் ஏறக்குறைய 28பேர் படுகொலை செய்யபட்டுள்ளனர்.15ற்கு மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளனர். 40இற்கும் மேற்பட்டோருக்கு எதிராக படுகொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இது யாவரும அறிந்த உணமையாகும்.

தோழர் த.சுபத்திரனின் படுகொலை யை முன் உதாரணமாகக் கொண்டு எமது அரசியல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றாா. (க-08)

---

# அமைச்சர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

டோக்கியோவில் கடந்த 9, 10ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்குமமாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு ஜப்பான் சென்றிருந்த அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீாிஸ், நிதியமைச்சர் கே. என்.சொக்ஸி, விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

அமைச்சரவைப்பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தமையும், வீஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சா மிலிந்த மொறகொட ஜப்பான் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் ஜப்பானில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பிரதேசங்களை பார்வையிட்டதுடன்,அந்தத் துறைகளை இலங்கையில் அறிமுகப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை. (க-10)

---

# பிஸ்டல் குழுவினரைக் கைது செய்ய பொலிஸில் தனியான விசேட பிரிவு

(கொழும்பு)

கொழும்பு ,திருகோணமலை, வவுனியா,மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் பிஸ்டல் குழுவினரை கைது செய்வதற்கு பொலிஸ் திணைக்களத்தின் தனியான பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக குற்றக்குழுக்களைக் கட்டுப்படுத்தும் விசேட குற்றத் தடுப்புப் பிரிவின் கீழேயே இப்பிரிவும் இயங்கவுள்ளது.விசேட பயிற்சி பெற்ற பொலிஸார் இப்பிரிவில் பங்கு பற்றுவர்.பிஸ்டல் குழுவும் பாதாள உலகக் குழுக்களும் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பதாக புலனாய்வு வட்டாரங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில்,இப்பிரிவை பாதாள உலகக் குழுக்கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் செயற்பட அனுமதித்திருப்பதாக சிரேஷ்ட பொலிஸ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப்பிரிவுக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பும் தேவைப்படுமா என்பது இனிமேல் தான் தீர்மானிக்கப்படவுள்ளது. மீண்டும் வீதித் தடைகளைப் போடுவது பற்றியும் தீர்மானிக்கப்படவுள்ளது. (க)

---

# அம்பாறையில் மீண்டும் குடியமர்வோருக்கு உதவ நிக்கொட் தயார்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இருந்து வெளியேறி கடந்த 13 வருடங்களாக அதிகளாக வாழ்ந்து விட்டு,மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறும் மக்களுக்கு நிக்கொட் ஸ்தாபனம் உதவ முன்வந்துள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள ''தங்கவேலாயுதபுரம்'' என்னும் இடத்தில் மீளக் குடியேறியுள்ள 92 குடும்பங்களுக்கு தலா் 25 ஆயிரம் ரூபா வதம் 23 லட்சம் ரூபா பகிர்ந்து அளிக்கப்படவுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு இவ்வுதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வுதவி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் அரியநாயகம் சந்திரநேருவின் வேண்டுகோளின் பேரிலேயே வழங்கப்படுகிறது என நிக்கொட் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-10)

---

# திருநெல்வேலி இளைஞருக்கு 5 வருடங்கள் கடுழியச் சிறை

(கொழும்பு)

தனது வீட்டில் தற்கொலைப் படையினர் அணியும் அங்கியை மறைத்து வைத்திருந்தாரென்ற குற்றச்சாட்டில் விசாரிக்கப்பட்டு வந்த திருநெல்வேலி,மாரியம்மன் வீதியைச் சேர்ந்த சுகந்தன் என்று அழைக்கப்படும் சதாசிவம் நிமலகுமார் (வயது -32) என்பவருக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய ஐந்தாண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனையை விதித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர் மீது சட்டமா அதிபரினால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

1997 டிசம்பரில் மட்டக் குளி காக்கைதீவிலுள்ள இவரது வீட்டில் சீலிங்கிற்கும் கூரைக்கு மிடையில் தற்கொலைப்படையினர் அணியும் அங்கியை மறைத்து வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இது பற்றிய தகவலை சட்டத் துறையினருக்கு வழங்கவில்லை என்று நீதிபதி தீர்ப்பின்போது தெரிவித்தார். அரசு சார்பில் சட்டத் தரணி மார சிங்க ஆஜராகியிருந்தார். (க)

---

## இராசி பலன்

**16. 06. 2003**
**(ஆனி 02, திங்கள்)**

| | | |
|---|---|---|
| துதியை | பி.ப. | 1.45 வரை |
| பூராடம் | பி.ப. | 5.01 வரை |
| இராகு காலம்- | | 07.23-8.53 |
| சுபநேரம்- | | 11.53-1.23 |

**மேடம்**
பித்தரோகம், அதிகாரிகள் ஒத்துழைப்பு, எடுத்த காரியம் தாமதமாகும், கட்டுப்பாடு.

**இடபம்**
எதிர்பாராத கலகம், ஆரோக்கியக்குறைவு, முயற்சி தடங்கல், கௌரவக்குறைவு.

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, நண்பர் கலந்துரையாடல், தேகஆரோக்கியம், செய்தொழில் விருத்தி.

**கடகம்**
மன மகிழ்ச்சி, சுபநிகழ்ச்சி, எடுத்த கருமம் கைகூடும், புதிய முயற்சி.

**சிங்கம்**
புத்திரரால் கவலை, வியாபார நன்மை, பிரயாணம், திடீர் அதிர்ஷ்டம்.

**கன்னி**
மாதாசுகம், புதிய திருப்பம்,தொழில் இலாபம், மனச்சஞ்சலம்.

**துலாம்**
சகோதரர் வழி நன்மை, பிரயாண சுகம், கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
அதிக செலவு, கடுமையான வார்த்தை, முயற்சி தாமதம், கலகம்.

**தனுசு**
போசன சுகம், எடுத்தகாரியம் கைகூடும், நல்ல முயற்சி, உடல் நலம்.

**மகரம்**
மனக்கிலேசம், காரிய அலைச்சல், சுப செலவு, தொழில் விருத்தி.

**கும்பம்**
கீர்த்தி, காரிய சிந்தை, நல்ல வருமானம், சந்தோசமான நிலை.

**மீனம்**
தூரதேச செய்தி, நல்ல நிகழ்வு, கடும் முயற்சி, பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

---

# நெல்லியடி மீன் சந்தையை மீள இயக்க முயற்சி

(பருத்தித்துறை)

நீண்டகாலமாகத் திறக்கப் படாதிருக்கும் கரவெட்டிப் பிரதேச சபையின் நெல்லியடி மீன் சந்தை வெகு விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை பிரதேச சபை மேற்கொண் டுள்ளது.

இம் மீன் சந்தை திறக்கப்படாமல் இருப்பது சம்பந்தமாக பிரதேச சபைச் செயலாளர் எஸ். பசுபதி தலைமையில் கூட்டமொன்று பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி.கிருஸ்ணசாமி, வடமராட்சி கோட்ட விடுதலைப்புலிகள் அரசியல் துறையினர் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

இக் கூட்டத்தில் மீன் சந் தையை கூடிய விரைவில் திறப்பதென்றும், பழைய மீன் சந்தைக் கட்டடத்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையமாகப் பாவிப்பதெனவும், நெல்லியடி பழைய சந்தையை நவீன கடைத் தொகுதியாக மாற்றுவதெனவும்,நெல்லியடிப் புதிய சந்தையில் புதிய கடைகள் அமைக்கும் வரை அங்கு பலசரக்கு வியாபாரத்தை தடை செய்வதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (க-25)

---

**உன் உள்ளத்திலுள்ள ஒருவரை எவ்வளவு நேசிக்கின்றாயோ அது போன்று சூழலையும் நீ நேசிக்க வேண்டும்**

## சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றன

சனீஸ்வர - வியாழ - இராகு - கேது மாற்றப் பலாபலன்கள் உங்களுக்கு எப்படி...? "அழகியல்" (தரம்1 - 5 வரை, தர உள்ளீட்டில் வாங்கக்கூடியது, புதிய பாடத்திட்டப் பாடல்கள் அடங்கியவை. அழகான சித்திரங்கள் பாடல்களுக்கு மெருகூட்டுகின்றன) சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் வெற்றியைத் தரவல்ல பொதுஅறிவு, மொழித்திறன், உளச் சார்பு அடங்கிய தகவல் தடாகம் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெறலாம். ஆனந்தி வெளியீடுகள் V.A. சிவராசா, 152 B, அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7167)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின பூச்சி நீக்கப்பட்ட டாஸ்கவுண்ட் (DASH HOUND) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 70 (34) கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 222 5401 (7170)


### டென்மார்க் அரசு உதவி இலங்கை சம்மதம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒலுவில் துறைமுகஅமைப்புக்கென 360 கோடி ரூபாவை டென்மார்க் அரசு மூலம் வழங்க இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதாக துறைமுக அபிவிருத்தி கப்பல்அமைச்சர் றவூப் ஹக்கீம்தெரிவித்துள்ளார்.(க-10)

### பாடசாலைக்கு இருமாடிக் கட்டடம்

(தும்பளை)

யாழ். கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இருமாடிக் கட்டடம் அமைத்து தருவதாக "நிக்கொட்" திட்டப்பணிப்பாளர் இலங்காநேசன் உறுதியளித்துள்ளார்.

இவர் அப்பாடசாலைக்கு நேரில் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை அவதானித்த பின்பே மேற்கண்ட உறுதியை வழங்கியுள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலை இவ்வருடம் முதல் ஆண்டு - ஆறு பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரை ஆண்டு 5 வகுப்புகள் வரை இயங்கி வந்தது தெரிந்ததே. (க-24)

# எண்ணத்தாலும், இமைக்காத பார்வையினாலும் அற்புதங்களை நிகழ்த்தும் மெஸ்மரிஸக்கலை

மெஸ்மரிசம் - மெஸ்மரினால் கண்டுபிடிக்கப்பட்டது. விஞ்ஞானத்தோடு உறவுகொள்ளும் அளவுக்குத் தகுதியும் - மதிப்பும் பெற்ற இந்த மெஸ்மரிசம் - மனிதனின் மன எண்ணத்தினாலும் - கண்களின் இமைக்காத பார்வையின் சக்தியாலும் - அற்புதச் செயல்களை செய்து காட்டுகிறது. இதனை யாரும் மறுக்க முடியாது. மனத்தால் நினைத்தால் - கண்களால் பார்த்தால் மகத்தான காரியங்களைச் சாதிக்க முடியும்.

### எதுவும் சாத்தியமே

மனோவசியம் என்னும் இந்த அற்புத மெஸ்மரிச சக்தியால் மனிதர்களை மட்டுமே தான் வசியம் செய்து, நம் எண்ணப்படி நடத்தலாம் என்பதில்லை! மிருகங்களையும் சகல ஜீவராசிகளையும் இதன்மூலம் வசப்படுத்தமுடியும். சர்க்கஸ் பழகும நபர்கள் சிங்கம், புலி, கரடி போன்ற மிருகங்களைக்கூட இந்த வகையில் கட்டுப்படுத்துகிறார்கள். நம்முடைய பார்வையில்தான் அவை வசியம் ஆகின்றன. ஆகவே, நீங்கள் மெஸ்மரிஸத்தில் பழகிவிட்டால் - நிபுணத்துவம் பெற்றுவிட்டால் சகலத்தையும் வெல்லக்கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள். நீங்களாகப் பார்த்து இவர்களுக்கு கெட்டது செய்யக் கூடாது! இது தவறு! என்று மனச்சாட்சிக்கு ஒப்ப நடந்துகொண்டால் ஒழிய, எந்தக் காரியமும் சாத்தியமில்லை என்று மெஸ்மரிஸத்தில் கூறுவதில்லை.

ஒரு கோழியையோ - சேவலையோ நீங்கள் வசப்படுத்த வேண்டுமானால், அதன் இரு கால்களையும் ஒரு கயிற்றில் கட்டுங்கள். அதைக் கீழ்நோக்கிப் பிடியுங்கள் தரையில் ஒரு கோடு போடுங்கள். அதன் மூக்குநுனி அதற்கு நேராக இருக்கும்படி பார்த்துக்கொள்க. தலையும் தரையோடு இருக்கவேண்டும் அந்தக் கோட்டுக்கு நேராக அதன் கண்களை நோக்கி உங்கள் பார்வையைச் செலுத்தி உங்கள் வசப்படவேண்டும் என்று மனதில் நினையுங்கள். அதன்பின் அவை உங்களை விட்டுப் பிரியாது. குழந்தையைப் போல ஒன்றிவிடும். இதைப் போல் பலவற்றையும் வசப்படுத்தலாம்.

### தூங்கும் வேளை

சிலர் விழித்துக் கொண்டிருக்கும் போது, நேரிடையாக அவர்களைப் பார்வையின்மூலம் வசியப்படுத்த உங்களால் முடியாவிட்டால் - அல்லது அவர்களை வசியப்படுத்துவது தற்கேற்ப அவர்கள் வசமாக நம்மிடம் சிக்காவிட்டால்-உங்கள் செய்கைக்கு அவர்கள் மதிப்பளிக்காவிட்டால் - அவர்களைத் தூங்கும் போது தான் வசப்படுத்த முடியும். அதோடு நீங்கள் வசப்படுத்த விரும்புகிறவர்கள் பெண்களாக இருந்தால் இந்த முறையைத் தான் கையாள வேண்டும்.

முதலில் அவர்களின் உருவத்தைக் கற்பனை செய்து கொண்டு, அவர்களை அன்றிரவு வசியப்படுத்தப் போவதாகவும், உங்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும் மனதில் நினைத்துக்கொள்ளுங்கள்! அன்று இரவு அதேபோன்று - அவர்கள் தூங்கும் இடத்திருச் சென்றும் கட்டளையிடலாம். வசதிபடாவிட்டால் உங்கள் வீட்டிலிருந்தே கட்டளையிடலாம். அவர்களுக்கு நீங்கள் கட்டளையிடுவது போல

சூரியகாந்

- நீங்கள் குறிப்பிடும் வேளையில் செய்வார்கள்!

இதே விதமாக நீங்கள் ஒரு பொருளை ஒருவரிடம் கொடுக்கும் போதே அவர் வசமாக வேண்டும் என்று, முன்தினமே மனதில் கற்பனை உருவத்தோடு சொல்லி வந்தாலும்; அதன்படியே உங்களிடம் யார் எந்தப் பொருளைப் பெற்றாலும் வசியமாவார்கள். இவை யாவும் ஏட்டளவில் இருக்கும்போது, அதிசயத்திலும், அதிசயமாகத்தான் இருக்கும். செய்கைக்குப் பின்னுதான பலனை அனுபவிக்க முடியும்.

### எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்

நீங்கள் ஒரு நபரை மெஸ்மரிசத்தின் மூலம் மயக்கி வசியப்படுத்தி விட்டால் - அவர் மயங்கி இருக்கும் வரை சுயமாக அந்த நபரால் எதுவும் செய்யமுடியாது. சிந்திக்க முடியாது. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ - நினைக்கிறீர்களோ அதன்படிதான் அவர் நடப்பார். ஆகவே ஒருவரைத் தூங்கவைத்ததும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். அவரை மீண்டும் சுய நிலைக்குக் கொண்டுவரும்வரை நீங்கள் அவர்மீது முழுக் கவனமும் செலுத்த வேண்டும்.

முதலிலேயே அவர் எழுந்திருக்கவேண்டிய நேரத்தையும் - தூங்கும்போதே சொல்லிவிடுவது - கட்டளையிடுவதுதான் நல்லது. அந்தப்படி இல்லாவிட்டால் அவர் காது அருகில் சென்று உங்கள் கைகளைச் சேர்த்துத் தட்டி "எழுந்திருங்கள்" என்று கட்டளையிடலாம். உங்கள் கண்களின் மூலம் ஒருவரை வசியப்படுத்திவிட்டுப் பின்னர் அவரை உங்களால் எழுப்ப முடியவில்லை என்று பயப்பட்டுப் பாதியில் விட்டுவிட்டுப் போய்விடக் கூடாது. அவர் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியவர்! அவர் இன்னும் அப்படியே சிறிதுநேரம் இருக்க விரும்பினாலும் அதுவரையில நீங்கள் அமைதியாகவே இருக்க வேண்டும். சிறிது தாமதித்தால் எப்படியும் அவரைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும்.

ஒருவரை உங்கள் கண்களால் பார்த்து - இரண்டு விரல்களைக் காட்டி தூங்கவைப்பதுதான் மெஸ்மரிஸம் என்றும் நீங்கள் அவசர முடிவுக்கு வரவேண்டாம். ஒருவரை உங்கள் கண்களால் உற்றுநோக்கி - இரண்டு விரல்களைக் காட்டி - உங்கள் மனதில் அந்த நபர் உங்களுக்குப் பின்னே வரவேண்டும் என்று நினைத்தாலும் அதன்படியே நடக்கும். கண்களை விழித்துக்கொண்டும், உங்கள் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, ஒரு நபரைப் பின் தொடர்ந்து வரச் செய்து சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

பொதுவாழ்வுக்கு உகந்ததல்ல.

அப்படி அவர் உங்கள் கட்டளைக்கு விழித்துக்கொண்டே பணிந்து போனாலும் - அவர் சுயநினைவு அடைந்ததும் அவை யாவும் மறந்து போகும் - சற்று நேரத்துக்கு முன் அவருக்கு என்ன நேர்ந்தது? தான் எப்படிப் பாதிக்கப்பட்டோம் என்பதையெல்லாம் தெளிவோடு சொல்லத் தெரியாது.

மேற்கூறிய முறை - நடைமுறையில் செய்து காட்டமுடியும் என்றாலும் - பொதுமக்களின் நல்வாழ்வுக்கு இந்த முறைகள் கெடுதியை ஏற்படுத்தக் கூடியவை என்பதால் சட்டமோ அன்றி - பொதுமக்களோ அனுமதிக்க மாட்டார்கள். இவை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் நீங்கள் ஈடுபட்டாலும் சட்டப்படி குற்றவாளியாகக் கருதப்படுவீர்கள். எனவே, இதைப்போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டு நற்பெயருக்குக களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள் என எச்சரிக்கை செய்கிறோம்.

நேரிடையாக ஒருவரைப் பார்த்துத் தான் மனோவசியமுறையில் வசியப்படுத்த வேண்டுமென்பதில்லை. பலவகையில் இவை நடைபெற முடியும். ஒருவர் நடந்து செல்லும் போதோ உட்கார்ந்து இருக்கும் போதோ தலையின்பின் கீழ்க் கழுத்துப்பகுதியைப் பார்த்தோ அந்த நபர் நமது கட்டுப்பாட்டுக்கு வர வேண்டும் - இந்த நேரததில் - இந்த நாளில் நம்மை நாடிவரவேண்டும் என்று நினைத்தாலும் அது மெஸ்மரிஸ் சக்தியால் நடைபெற முடியும் என்பதை உணர்ந்து - நாட்டு மக்களின் நன்மையை மனதில் கொண்டு நல்ல மார்க்கத்தையே நாடும்படி வேண்டிக்கொள்கின்றேன். மனோ சக்தியைத் தூய்மையுடன் வளர்த்துக கொண்டவர்களுக்கு இவைசாத்தியம்.

# அவரைக் கஞ்சிக் கிடாரத்துள் வீழ்ந்த கைதி துடி துடித்துப் பலி

## வெலிக்கடையில் சம்பவம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சமயலில் ஈடுபட்டிருந்த கைதி ஒருவர், அவரைக் கஞ்சி சமைத்த கிடாரத்தினுள் வீழ்ந்து துடி துடித்துப் பலியானார்.

27 வயதான இந்நபர் பெரிய கிடாரத்தினுள் கஞ்சி சமைத்துக் கொண்டிருந்த வேளை, ஒடுக்கமான சமயலறைக்குள் புகுந்த இன்னொரு கைதி சறுக்கி பலியானவரின் மேல் வீழ்ந்ததனால் இம்மரணம் நிகழ்ந்துள்ளது.

இந்நபர் விடுதலை செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறைச்சாலையில் கைதிகள் மேற்கொள்ளும் நாளாந்த கடமைகளில் சமயலும் ஒன்று.

போதைப்பொருள் பாவனை தொடர்பாகவே இக்கைதி, கைது செய்யப்பட்டிருந்தார். சிறைச்சாலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை அங்கு மரணமானார். (க)

# யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் படுகொலைகள்

## அதிருப்தி நிலையில் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துவரும் படுகொலைச் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் பலரும் கடும் அச்சமும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், நடைபெறும் இத்தகைய படுகொலைச் சம்பவங்கள், மர்ம மரணங்கள் போன்றவை தேவையற்ற, அநாவசியமான படுகொலைகள் என்றும், போர்ச் சூழ்நிலை அற்ற சமாதான காலத்தில் இடம்பெற்றுவரும் இச் சம்பவங்கள் மனித வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும், நிம்மதியற்ற வாழ்வு வாழவேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி இராச வீதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம், தொடர்ந்து யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியில் இடம்பெற்ற மர்ம மரணங்கள், ஈ.பி.ஆர்.எல்.எப். முன்னாள் உறுப்பினர் வாள்வெட்டுக்கு இலக்காகியமை, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க முக்கியஸ்தர் சுபத்திரனின் படுகொலைகள் யாவும் மிகுந்த வேதனைக்குரியது என்றும் மனிதாபிமானம் அற்றது என்றும் பொதுமக்கள் மத்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவதுடன், சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படல் அவசியம் என்றும் பொதுமக்கள் தரப்பில் இருந்து மேலும் வலியுறுத்தப்படுகின்றது.(க)


## கண்ணீர் அஞ்சலி

மறைந்த **Rev. A. A. PAUL**

ஆன யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரினது
நினைவாக எமது இதய அஞ்சலி செலுத்தியும்
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தும்,
அன்னாரின் துணைவியார் VINO விற்கும்,
பிள்ளைகளுக்கும், குடும்பத்தினருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கிறோம்.

**Mrs. LUTHER, P.JEYASINGAM (U.S.A)**
Children, Son-in-Law
Daughters in Law & Grandchildren
and
**Mrs. LUTHER, N.SEVARAJAH**
& Children-Dushan & Janey
Jaffna.

(C-7168)


### சிரமதானப் பணிகள்

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, நெல்லியடி புதிய சந்தையில் சிரமதான நடவடிக்கைளை மேற்கொண்டன.

சபைச் செயலாளர் திரு.எஸ்.பசுபதி தலைமையில் நடைபெற்ற இச் சிரமதான முயற்சிகளிலே யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சபையின் உத்தியோகத்தர்கள, சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் சிரமதானங்களை மேற்கொண்டனர். (க-52)

### காஸ் சிலிண்டர் விலை குறைப்பு

(கொழும்பு)

''ஷெல் காஸ்'' நிறுவனம் வீட்டுப்பாவனைக்குரிய காஸ் சிலிண்டர் ஒன்றின் விலையை 25 ரூபாவால் குறைத்துள்ளது.

இந்தவிலைக் குறைப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுககு வந்துள்ளதாகவும் 12.5 கிலோ எடையுள்ள காஸ் சிலிண்டர் 570 ரூபாவாக விற்பனை செய்யவேண்டும் என்று அறிவித்துள்ளது. (வ)

# வைத்தியசாலைகள் சனியன்று வழமைபோல் இயங்கின

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த பணி நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நாட்டின் சகல அரசாங்க வைத்தியசாலைகளிலும் வழமைபோல் பணிகள் இடம்பெற்றன.

இந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் என்பன கடந்த 9 ஆம் திகதிக்குப பின்னர் வழமைபோல் இயங்கின. இருப்பினும் நேற்று முன்தினம் விடுமுறை தினம் என்பதால், மதியத்துடன் நோயாளரைப் பார்வையிடும் பணி நிறுத்தப்பட்டது.

இதனால் தூர இடத்தில் இருந்து வந்த பெருமளவு நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதேவேளை, வைத்தியர்கள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் மீண்டும் இன்று முதல் பணி நிறுத்தப் போராட்டத்தில் வைத்தியர்கள் ஈடுபடவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## மதுபானத்துடன் வந்த லொறி

# கொள்கலனுடன் மோதியதில் சாரதி ஸ்தலத்தில் பலியானார்

(கொழும்பு)

வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிந்த கொள்கலன் லொறி ஒன்றுடன் மதுபானம் ஏற்றிவந்த லொறி ஒன்று மோதியதில், கொள்கலன் சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்.

கொழும்பு - சிலாபம் வீதியில் கல்கந்த என்னும் இடத்தில் இப்பரிதாபகரச் சம்பவம் இடம்பெற்றது.


சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

குறிப்பிட்ட வாகனம் பழுதாகி விடவே வாகனச் சாரதி வீதி ஓரத்தில வாகனத்தை நிறுத்திவிட்டு, வாகனத்தின் கீழே படுத்துறங்கிய வேளையில், வீதியால் மதுபானம் ஏற்றி வநத லொறி கொள்கலனுடன் மோதியதாலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. (சு)

# குழப்பநிலைகளைக் கண்டு சோர்ந்து விடாது

# சமாதானத்திற்காக அனைவரும் பாடுபடவேண்டும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுவரும் குழப்ப நிலைகளைக் கண்டு சோர்ந்து விடாது தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல அனைவரும் பாடுபட வேண்டும் எனப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விகாரை ஒன்றில் நடைபெற்ற சமய நிகழ்வில்கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை சமாளித்து தொடர்ந் தும் சமாதானத்திற்காக பாடுபட அனைரும்ஒத்துழைக்க வேண்டும்.

தற்போதைய சமாதான முயற் சிகளில்ஒருசிலகுறைபாடுகள் இருந் தாலும் யுத்த அனர்த்தங்களின்றி மக்கள் அமைதியானதொரு வாழ்க் கையை அனுபவித்து வருகிறார் கள்.

எனவே எத்தகைய இடர்கள் ஏற்பட்டாலும் சமாதான முயற்சிகள் தொடரும் என்பதை மிக உறுதி யாக கூறிவைக்க விரும்புகிறேன்.

சமாதானத்தை நோக்கி நாம் பயணம் செய்யும் போது பல கஷ் டங்களை அனுபவித்தே ஆகவேண்டும் அவ்வாறானால்தான் எமது பய ணத்தின் இலக்கை வெற்றிகரமாக அடையலாம் என்றார். (க-10)

## புது மெருகு பெறும் விளையாட்டு மைதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டரங்கு துரித கதியில் அபி விருத்தி செய்யப்பட்டு வருகிறது.

செம்மண் பறிக்கப்பட்டதுடன், துப்புரவுப் பணிகளும் இங்கு மேற் கொள்ளப்பட்டு வருவதை அவதா னிக்க முடிகின்றது.

விளையாட்டு மைதானம் அழகு படுத்தப்படுவதுடன், பார்வையாளர் பகுதியும் புதுமெருகு பெறுகிறது. துரையப்பா விளையாட்டு அரங்கில் விரைவில் இடம்பெறவுள்ள தேசிய விளையாட்டு நிகழ்வை முன்னிட்டே இப்பணி மேற்கொள்ளப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-51)

# புலிகளின் கப்பல் மீதான தாக்குதல்

# பாதுகாப்பு அமைச்சரின் விளக்கம்

(கொழும்பு)

வடபகுதியில் கடற்பிரதேசங் களில் சந்தேகத்திற் கிடமான முறை யில் பயணஞ்செய்யும் எந்தக் கப்ப லையும் தடுத்து நிறுத்தி சோதனை செய்வதற்கு கடற்படையினருக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடு தலைப் புலிகளின் கப்பல் ஒன்றை கடற்படையினர் தாக்கியழித்த சம்ப வத்தை அடுத்து நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டில பேசிய பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித் தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசு கையில் எந்த வழியிலேனும் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கைக்கு ஆயுதம் கொண்டுவர அனுமதிக்கப் படமாட்டாது. அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வரும் எந்தவொரு கப்பலையும் தாக்கி அழிக்குமாறு பாதுகாப்பு அமைச்சி னால் கடற்படையினருக்கு பணிக் கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அமைச்சர் அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல சட்டவிரோதமாக இலங்கை கடற் பரப்பில் ஊடுருவியது மட்டுமன்றி கடற்படையினர் சரணடையுமாறு கேட்டபோது, அதனை புலிகள் நிரா கரித்து விட்டனர் என்றும்,


இதனாலேயே கடற்படையினர் அக்கப்பலை தாக்கியழித்ததாகவும் குறிப்பிட்டார். (க-10)

# சூழல் பாதுகாப்பு வாரத்தை ஒட்டி மன்னாரில் சிரமதானப் பணி

(கிளிநொச்சி)

சூழல் பாதுகாப்பு வாரத்தை ஒட்டி மன்னாரில் இன்று மன்னார் அரச செயலகத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறையினரும் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொள்ள உள்ளனர்.

மேலும் இந்தப் பணியில் அனைத் துத் திணைக்களங்களைச் சேர்ந்த வர்களும் கலந்து கொள்ளவுள்ள துடன் கிராமமட்டத்தில் கிராம அபி விருத்திச் சங்கங்கள் மற்றும் பொதுத் தொண்டர் நிறுவனங்கள் என்பன வும் இந்தப் பணியில் ஈடுபட உள் ளனர். (க-8)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கனடாக்கிளையினால் வழங்கப்பட்ட இரு கணனிகளை இளைப்பாறிய உப அதிபர் செல்வி தனம் வேலுப்பிள்ளை, அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசனிடம் கையளிக்கிறார். (படம்: பரு.நிரூபர்)

# யாழ்.குடாநாட்டில் 20குளங்கள்

# நியாப் அமைப்பினரால் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் நிறுவனம் சமகாலப்பகுதி யில் யாழ்.குடாநாட்டில் 20 குளங் களை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுவருவதாக அவ் அமைப்பின் யாழ்.செயலகத் தரவுகள் தெரிவிக் கின்றன.

இக்குளங்கள் யாவும் அக்குளத தினால் பயனடைய இருக்கும் மைய கிராமங்களை அடிப்படையா கக்கொண்டே புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தகவல்கள் மேலும் தெரி விக்கையில்,

இவற்றில் பொன்னாலை, காரைநகர் மத்தி, இருபாலை தெற்கு, புளியங் கூடல், நவாலிதெற்கு, வேலணை தென கிழக்கு இடைக்குறிச்சி, கரவெட்டி கப்பூது,வல்லிபுரம்,சரவணை கிழக்கு ஆகிய மையக்கிராமங்களை அடிப் படையாகக்கொண்டு முறையே - பெரிய குளம், சாம்பல் ஓடை உவர் நீர்தடுப்பு அணை, செம்மணிக்குளம் குறுக்குக் கடல் உவர் நீர் தடுப்பு அணை, வேலன் சுண்டிக்குளம், பெருங்குளம், தம்பளைகுளம் நெடுங் கரைக்குளம், கவருவிராய் குளம், சரவணை உவர்நீர் தடுப்பு அணை ஆகிய பத்து குளங்களும் தற்போது 75வீத வேலைகள் பூர்த்தியான நிலையில் உள்ளன.

மேலும் புலோலி தெற்கு மத் தொனி, இமையாணன் மேற்கு, அத்தாய் துன்னாலை மேற்கு, துன்னாலை வடக்கு,உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி மத்தி, துன்னாலை தெற்கு, குடத்தனை ஆகிய மைய கிராமங்களின் அடிப்படையில் முறையே கொட்டு கேணிக்குளம் தாளம் குழிகுளம், துவாலிக்குளம், ஓந்திராய் குளம், தாமரைக் குளம், சிலிந்தில் குளம், கிராய்குளம், விராய்க்கி குளம், வீரக்களிக்குளம், சாலம்பாய் குளம் ஆகிய பத்து குளங்களும் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இருப் பதாக நியாப் திட்டத்தின் யாழ்.மா வட்ட குளப்புனரமைப்புகள் பற்றிய தரவு தெரிவிக்கின்றது. (க-4)

# யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கு அரசியல் பிரமுகர்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தம்பிராசா சுபத்திரனின் படுகொலைச் சம்ப வத்தை அடுத்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அரசியல் பிரமுகர்கள் பலரும் தொடர்ந்து யாழ்ப்பாணத் தில் தங்குவது குறித்து பரிசீலித் வருவதாக பிரமுகர்களுடன் தொடர் புடைய வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

தமது உயிருக்கு எவ்வேளையி லும் ஆபத்து ஏற்படலாம் என இவர் கள் கருதவதாகவும், தமது இருப் பிடங்களை தென்பகுதிகளுக்கு இவர்கள் தற்காலிகமாக மாற்றலாம் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க)

## உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பருத்தித்துறையில்விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை உள ளூராட்சி வாரத்தையொட்டி சன சமூக நிலையங்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை நடாத்த வுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை நகரசபைச் செயலாளர் திருமதி கமலா திருச்செல்வநாயகம் மேற் கொண்டுள்ளார்.

அத்தோடு நகரில் உள்ள பொதுச் சந்தை, முக்கிய வீதிகளில் சிரம தானப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி உதவி ஆணையாள ரால் வழங்கப்பட்ட நிழல் தருமரங் கள், சனசமூகநிலையங்களிலும் முக்கிய பொது இடங்களிலும் நாட் டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க- 52)

## பொரளை அச்சக ஊழியர் மீதான தாக்குதல் அரசிற்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பொரளை அரசாங்க அச்சகமும்அதன ஊழியர்களும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்காதுள்ளமை குறித்து நீதிமன் றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

மூன்று தொழிற்சங்கங்களும் நான்கு நிநபர்களும் இணைந்து இந்த மனு வைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் இடம் பெற்ற இந்த சம்பவத்தின் போது மேலதிக அச்சகா ஆதிக்கட்சி மற்றும் அரசாங்க அச் சக ஊழியர்களும் தாக்கப்பட்டனர். இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னரும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கவில்லை எ ன அந்த மனுவில குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

## பருத்தித்துறையில் மரம் நடும் இயக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பெரிய அளவில் மரம் நடும் இயக்கங்களை மேற்கொண்டு வருகின்றது. இம் மரம் நடுகை இயக்கங்களை நடாத் துவதற்கான நிழல் தரு மரங்களை யாழ். உள்ளூராட்சி திணைக்களம் பிரதேச சபைக்கு வழங்கி இருந்தது.

பருத்தித்துறை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் புலோலி பொது நூலகம், மந்திகை சந்தைப் பகுதி, குடத்தனை உப அலுவல கம், சனசமூக நிலையங்கள், பொது இடங்கள், வீதிகள் ஆகியவற்றில் மரம் நடும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மயானங்கள் முக்கிய வீதிகள் ஆலயப் பகுதிகளில் பொதுமக்களின் ஆதரவுடன் சிரமதானங்களும் நடை பெற்றுவருகின்றன. (க-52)


## தரம் 10 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூத்த எழுத்தாளர்
அமரர் கே. டானியல் ஞாபகார்த்தமாக
கட்டுரையின் தலைப்பு
தொலைக்காட்சியுமமாணவர்களும்

போட்டியின் விதிகள்:

தரம் பத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 225சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.06.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்
கட்டுரைப்போட்டி இல-5

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................
ஆசிரியர்.

# இலங்கையிற் பிறந்த சீதையை இராமன் மணந்தான்

# ஊழ்வினை உருத்துவந்தூட்ட இராவணன் மடிந்தான்

மக்கள் தம் நிலைமைமறந்து மாக்களாய்ப் பேசுவது இன்னது, பேசாதது இன்னது என்று அறியாது, பாஷை தடுமாறுகின்ற காலத்திலே, சற்றே சமயவெறியும் ஏற்றிவிட்டால், சும்மா எரிகிறநெருப்பு இன்னுஞ் சுவாலித்துச் சுற்றாடலைவெயுஞ் சாம்பர்செய்து புனிதம் ஆக்கலாம். அதன்பிறகு யாராயினும் எஞ்சியிருந்தால், அவர்கள் நீறுபூத்த நெருப்புகளாய் முழு நீறுபூசிய முனிவர்கள் ஆகலாம் போலும்! அப்படி ஆகலாம் ஆனால் அது நல்லது தானே!

உலகம் கருத்துலகம், சொல்லுலகம் ஆக இரண்டுவகையாய்க் கிடக்கின்றது. கருத்துஞ் சொல்லும் ஒன்றையொன்று இன்றியமையாதவை. கருத்து, சொல் இரண்டின் கூட்டரவே இந்த உடம்பு. உடம்பும் நாம் வசிக்கின்ற ஒரு சிறு உலகமே. உடம்பு முதலிய இந்த உலகங்கள், உயிர்களின் புண்ணியபாவங்களுக்கு ஏற்றவாறு வருகின்றன. வந்துநின்று பிறகு போகின்றன. எந்த உயிருக் காயினும் எந்த உலகமேனும் சொந்தமானதன்று. உலகச் சொந்தக்காரன் வேறு. உயிர்வேறு. உயிர்-உடம்பு முதலிய உலகங்களில் ஒருசில காலம் ஒதுக்கத் குடியிருப்பது. அது மாறி மாறிக் குடியிருக்கும்.

'புக்கிலமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சிலிருந்த உயிர்க்கு'

-என்பது தமிழ்வேதம்.

'வாதம் முதலியவற்றின் 'இல்' ஆகிய உடம்புகளுள் ஒதுங்கியிருந்தே போந்த உயிர்க்கு, எஞ்ஞான்றும் இருப்பதோரில். இதுகாறும் அமைந்ததில்லைபோலும் அஃதோயங்கள் இருக்க அமைந்த ஞான்று இருதும் வெகுண்டஞான்று போயும், ஒருடம்பினும் நிலை பெறாது வருதலால் 'துச்சிலிருந்த' என்றார்' என்பது பரிமேலழகர் உரை.

### இலங்கை மாநகர்

உடம்புக்குடில் போன்றதே உலகக் குடிலும், சுடலையிற்குவிந்து கிடக்குஞ் சாம்பர்மலைக்கு, யாராவது ஒருகாலத்தில் உள்ளவர்கள் மாத்திரஞ் சொல்லமுடியுமா? இந்த உலகம எத்தனை முடிமன்னர்களைக கண்டது. சாதி, சமயங்களைக் கணடது. இன்னும் எத்தனை சாதி, சமயங்களைக் காணுமோ, அதன் கொட்டாவியின் இரகசியங்களை யாரறிவார்.

'இலங்கை மாநகர் இராக்கதர் இருப்பிடம்' என்கிறது இராமாயண இதிகாசம். இது ஒரு காலத்துக்கதை. அதற்குமுன் அது தேவர்களுக்கு இருப்பிடம் என்கிறது புராணம்.

ஒருகாலத்திலே பொன்மயமான இமயமலைச் சிகரம் ஒன்று முறிந்து கடலில் வீழ்ந்தது. அந்தப் பொற்சிகரமே இலங்கை 'பொன்னுக்கு ஈழம் என்பது மற்றொருபெயர். இதனால் இலங்கை ஈழமென்னப்படும். இமையமலைச் சிகரம் தேவர்கள்

**இலக்கிய கலாநிதி**
**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**

உறைவிடம்' அதனால் இலங்கையாகிய ஈழம் தொடக்கத்தில் தேவர்களுக்கு உறைவிடமாய் இருந்தது. பிறகு இராக்கதர்கள் தவ வலிமையினால் இலங்கையைத் தம்வசப்படுத்திக் கொண்டார்கள். ஒருமுறை தேவர்களின் முறையீட்டால் மகா விஷ்ணு மூர்த்தி இராக்கதர்களை இலங்கையினின்றும் ஓட்டிய பாதாளத்துக்குப் புகும்படி செய்தார். அதன் பிறகு இலங்கை வெறுமையாகக் கிடந்தது. அப்பொழுது விச்சிரவசு என்னும் முனிவரின் புதல்வன் வைசிரவணன் என வழங்குகின்ற குபேரன் என்பவன்-அவன் இயக்க கணத்தைச் சேர்ந்தவன்-தவம்செய்து சிவ பெருமானுக்குத் தோழனாய், வெறுமையாய்க் கிடந்த இலங்கைக்கு அரசனான். அவனிடம் ஒரு ஆகாய விமானமும் இருந்தது அதற்குப் புஷ்பக விமானமென்று பெயர். அதில் அவன் நினைத்த இடங்களுக்குச் சென்று வருவான்.

அவன் அவ்வாறு அரசு செய்து கொண்டு வருகின்ற காலத்தில், ஒரு நாள் பாதாளத்திற்போய் ஒதுங்கியிருந்த கமாலிஎன்னும் இராக்கதன், பதுங்கிப் பதுங்கி இலங்கைக்கு மெல்லவந்தான். வந்தவன், குபேரன் புஷ்பக விமானத்தில் போக்குவரவு செய்வதையும், தாங்கள் முன்னொரு காலத்தில் அரசு வீற்றிருந்த மாட மாளிகைகள் எல்லாம் இடிந்தும் ஒடிந்தும் தேடுவாரற்றுக் கிடக்க அவைகளில் குரங்குகள் குந்தியிருப்பதையும் பார்த்தான். அவனுக்கு வயிறு நெருப்புப்பற்றி எரிந்தது. பெருமூச்சு விட்டான் பொறுக்கமுடியவில்லை. உடனே பாதாளத்திற்குப் போய்த் தன்மகளுக்கு வேண்டுவன சொல்லி, இலங்கையை வெல்வதற்குரிய மகப்பேறு பெறும்படி தூண்டினான். அவள் அழகிய நல்ல வடிவெடுத்துக்கொண்டு குபேரன் தந்தையாகிய விச்சிரவசு நோற்குந் தவ வனத்துட்புகுந்து, அவா எதிரில் தவமிருந்தாள். பிராமாவின் புத்திரா் புலததியர். புலத்தியரின் புத்திரா் விசசிரவசு. அவள் தவம் ஒருநாள் பலிததது. விச்சிரவசுவுக்கு அவள் வயிற்றில் இராவணாதியர்கள் உதித்தார்கள்.

### மண்டோதரி

தவ வலிமையினால் இலங்கை அவர்கள்வசம் ஆற்று. இராவணன் மனைவி மண்டோதரி. அவள் இராக்கத கணத்தைச் சேராதவள். தீண்டாத கற்புடைய செழுந்திருக்களாகிய நித்திய கன்னிகைகளின் வரிசையைச் சேர்ந்தவள். சிவனை நோக்கிச் செய்த தவ விஷேசத்தால் சிவனிடம் மண்டோதரியை இராவணன் பெற்றான். மண்டோதரி, மந்தோதரி எனவும், வண்டோதரி எனவும் படுவாள். திருவாசகத்தில்

'ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்
-வண்டோதரிக்குப்
பேரருளின்ப மளித்த பெருந்துறைமேய பிரான'

என்று பாராட்டப்பட்டிருக்கின்றாள். அவள் ஒருவனைப்பற்றி இருந்தவள். அந்தஒருவன் ஈசுவரனே. ஈசுவர கடாற்சத்தால் மண்டோதரி, இராவணனை அடைய முன்னமே கருப்பவதியாயிருந்தாள. இருந்தவள் இலங்கையிற் கருவுயிர்த்தாள். அக்குழந்தைதான் சீதை. சீதை சிவகுமாரி. சிவன்அருளால் உற்பவித்தவள். இலங்கையிற் பிறந்தவள்.

ஈழமதிராவணன் மனைவி மந்தோதரிக்
கிறைவர் பெண் மகவொன்றளித்
தினிதருள் செயப்பெற்றது இம்மகவுதான் சீதை

இவள்சனை பூமியுமிதே என்கிறது ஈழமண்டல சதகம். இந்தச் சீதையாகிய பெண் குழந்தையால் இராவணனுக்கு மரணம் என்றனா் இலங்கையிற் சோதிடர். உடனே, இராவணன் அக்குழுந்தையைப் பேழையிற் கிடகக வைதது்க் கடலில் தள்ளிவிட்டான். அது கடலலைகளால் உந்தபபட்டு, மிதிலைக்கரையை அடைந்தது. அதுநிற்க.

### ஊழின்வலி

'ஊழிற் பெருவலியாவுள. எந்த இராவணன் எந்தச் சீதையைப் பேழையுள்வைத்து கடலில் தள்ளினானோ அந்த இராவணனே ஒருநாள், அதே சீதையைக் காட்டில்கண்டு குடிசையோடு தூக்கிக்கொண்டுவந்து, அசோகவனத்திற் பாதுகாத்தான். 'ஊழ்' மற்றொன்று சூழினும் தான் முந்துறும் இராவணன் இவ்வனம் அறன்கடை நின்றானாயினும், மகா சிவபக்தன். அவன் சிவபக்திக்கு எத்தனையோ கதைகளுண்டு. 'இராவணன் மேலது நீறு' என்பது சம்பந்தர் திருவாக்கு. அவன்தாய், ஒவ்வொரு இரவிலும், ஆயிரம் 'ணிக லிங்கம் புதியனவாகச் செய்து பூசிப்பவள். காலைதோறும் பூசித்த லிங்கங்கள் ஆற்றிலிடப்படும். அவ்வனம் லிங்கங்கள் ஆயிரக் கணக்கில் இடுவதால் அந்தஆறு, 'மகாலிங்க கங்கை' என்ற பெயர்பெற்றது. அப்பெயரே பிறகு 'மகாவலிகங்கை' யாற்று.

'சிவகோடியடைய முனஞ்செம்மல் தசக்கிவனால்
அவகோடி யகற்றி யியற்றறு கோடி யாலயமும்
தவகோடி வீடணனாற் றருமுக்கோடியுமாக
நவகோடி சிவாலயங்கள் நணியதிலங்கா நகரம'

தாய் இராத்திரிதோறும் ஆயிரஞ் சிவலிங்கஞ்செய்து பூசிப்பவர்.

ஆனால் இராவணன் ஆறுகோடி சிவாலயமும், வீடணன் மூன்றுகோடி சிவாலயமுமாக, ஒன்பதுகோடி சிவாலயங்கள் இலங்கையில் ஒருகாலத்தில் அமைத்தனர் என்பதில் நூதனம்இல்லை: இப்பொழுது அநுராதபுரம், பொலநறுவை என்ற இடங்களில் எவ்வாறு புத்தசின்னங்கள் காடுகளிற் பரந்து பட்டுக்கிடக் கின்றனவோ, அவ்வாறு முன்னொருகாலத்தில் இலங்கை முழுதுஞ் சிவலிங்கமயமாகவே இருந்தது.மொகஞ சதாரோ, ஹரப்பா இவைகளை அகழ்வதுபோல இலங்கையை அகழ்ந்தால் கீழே ஒருபடை சிவலிங்கப் படையாக இருக்கலாம். சித்தரான திருமூலா் இலங்கையைச் சிவபூமி (சிவே'த்திரம்)என்கிறார்.

### ஆரியமும் தமிழும்

ஸ்ரீராமன் இலங்கையிற் பிறந்த சீதையை மணந்தான். அக்காலத்தில் இலங்கைக்குத் தெற்கேயும் நிலப் பரப்பிருந்தது. அந்த நிலப்பரப்பில் கபாடபுரம் என்றஇடத்தில இடைச் சங்கம் இருந்தது என்கிறது வான் மீகம். ஈழத்துப் பூதந்தேவனார் என்னுஞ் சங்கப்புலவர், அக்காலத்து ஈழநாட்டில் இருந்தவர் ஆகலாம். இராக்கத கணத்தவரன்றி மனித கணத்தவரும் வாழ்ந்திருக்கலாம். சீதை மனிதவடிவில் தேவகணத்தைச் சேர்ந்தவள்.

மகாபாரதத்தில் சந்திரவம்சத்தவனான அருச்சுனன், அதே வமிசத்துப் பாண்டியன்மகளை வதுவைசெய்தான். ஆரியம், தமிழ் மனிதரின் இருவகைநிலை குறித்தவைகள். ஈசுவரனே 'ஆரியன்கண்டாய், தமிழன்கண்டாய்' எனப்படுகிறார். ஒரு மனிதனே அறிவுநிலையில் ஆரியன் எனப்படுவான். அறிவைப் பயிற்சி செய்வதாய், அன்புநிலையில் தமிழன் எனப்படுவான். ஆரியனும்தமிழனும் ஒருவனே! அறிவைத் தேடுவதற்கு வடபாகமும், அன்பைத் தேடுவதற்குத் தெனபாகமும் உரியவையாய் அமைந்தவைகள். விபீடணன் அரசு புரியுங்காலத்தில், வடபாகத்திலிருந்தும், தென்பாகத்திலிருந்தும் பாரதர்கள் வரத்தொடங்கினார்கள். அவர்கள் நெறி சிவநெறி, சைவ நெறி, இரு பகுதியாரும் இங்கே வேற்றுமையின்றிக் கலந்தனர்.□

---

## இந்து சமயப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபரில்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப்பாடசாலைகளில்பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கான 'இந்துசமயப் பரீட்சையினை' எதிர்வரும் ஒக்டோபர்மாதம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதன்பிரகாரம் மேற்பிரிவில் 10 ஆம் ஆண்டில் சித்திபெற்று 11ஆம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தி ஏய்தவர்களும் இப்பரீட்சைக்கு தோற்றமுடியும்.

அததுடன், இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்படி தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிபபடுத்தல்வேண்டும. விண்ணபதாரிகள் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைஒன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். இதேவேளை, முதற்தடவையாகத் தோற்றுபவர்கள் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்றும் ஏனையோர் 50 ரூபாவை பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள யாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 20 தகதிக்கு முன்னர் அறநெறிப் பாடசாலையூடாக அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-10)

## படையினரின் நடமாட்டம் அதிகம்

## குருநகர், பாசையூர் மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளில் உள்ள படைமுகாம்களில் இருந்து கேட்கும் துப்பாக்கி வேட்டொலிகளும் என்றும்இல்லாத இராணுவத்தினரின் நடமாட்டமும் அப்பகுதி வாழ்மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டுபண்ணி உள்ளதாக பொது மக்கள்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலங்களுக்குபிறகு முகாம்களில் இருந்து தீர்க்கப்படும் சரமாரியான துப்பாக்கி வேட்டொலியும் இராணுவ வாகனங்களின் சஞ்சாரமும் திடீர்ரோந்து நடவடிக்கைகளுமே இத்தகைய அச்சத்தை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி உள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினமும் நேற்றும் யாழ்.நகரப்பகுதியில் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், நீண்ட காலங்களுக்கு முன்பிருந்த அசாதாரண சூழ்நிலையை போல் இராணுவத்தினா் மரங்களின் பின்னாலும் மதில்களின பின்னாலும் ஆயுதங்களுடன காப்புஎடுத்து பதுங்கி நின்றதை அவதானிக்கமுடிந்தது.

முன் எச்சரிக்கையாக தேசிய அடையாளஅடடைகளை மீண்டும் சட்டைப் பைகளில் கொண்டு மக்கள் நடமாடியதை அவதானிக்கக்கூடியதாக இருநதது. (க-04)

## அமைச்சருக்கு பாராட்டு

(கொழும்பு)

இரண்டாவது உலக இந்துமாநாட்டினை சர்வதேசமே பாராட்டும் வண்ணம் மிகவும் சிறப்பாக நடத்தியதற்காக இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனை சிங்கப்பூர் அறநிலைத்துறை துணைத் தலைவர் வீ.ஆர்.நாதன் பாராட்டி 2 லட்சம் ரூபாவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அத்துடன் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனை வாழ்த்தி வாழ்த்துமடல் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக தொிவிக்கப்படுகிறது. (க-10)

## நூல் அறிமுகவிழா

(பருத்தித்துறை)

'பருவமானவர்கள்' நூல் அறிமுகவிழா பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபத்தில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு.கே.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பண்டிதர் கே.சச்சிதானந்தம் (மதுரைப்பண்டிதர்) பருத்தித்துறை மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர்.எஸ்.கதிரவேற்பிள்ளை, டாக்டர்.எஸ்.சுந்தரமூர்த்தி ஆகியோர் நூல் அறிமுகவுரையை நிகழ்த்தினர்.

நூலாசிரியர் நடனசபாபதி பதிலுரை நிகழ்த்தினார். (க-52)

## நாட்டில் உள்ள நகரப்புறங்களை அபிவிருத்திசெய்ய புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள நகரப்புறங்களை அபிவிருத்திசெய்ய, அபிவிருத்தி அதிகாரசபை புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதன்பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 20வது நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும்,

அதன் முதல்கட்ட நடவடிக்கையாக அம்பாறை, கிளிநொச்சி, யாழ்ப்பாண நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும நகர பொதுவசதிகள் அமைச்சர் மொஹமட் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும் மன்னார், புத்தளம், வவுனியா, தெகிவளை, கல்கிசை, அம்பாந்தோட்டை, களுத்துறை, மாத்தளை, போகாகம, மஹியந்தனை, கமன்கடுவ, பம்பலப்பிட்டிய ஆகிய நகரங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்றும் தனியார்துறையினிடம் இருந்து நகரப்புறங்களின் அபிவிருத்திக்கு கூடுதலான ஒத்துழைப்பை பெற்றுக கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு பல வெளிநாட்டுக் கம்பனிகளும் உதவ முன்வந்துள்ளதாக குறிப்பிட்டஅமைச்சர் மஹரூப, சீனக் கம்பனி ஒன்று. கொழும்பு நகரிற்கு அருகில் 10 குடியேற்றத் திட்டங்களை அபிவிருத்திசெய்து, அடிப்படை வசதிகளைச்செய்து கொடுக்க இணங்கியுள்ளது எனத் தெரிவித்தார். (க-10)

## சட்டவிரோதமாக

## ஜப்பானில் தங்கியிருக்கும் இலங்கையரை நாடு கடத்த உத்தரவு

(டோக்கியோ)

ஜப்பானில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களை திருப்பிஅனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்நாட்டுப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அண்மையில் டோக்கியோ சென்றிருந்த பிரதமா் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள விகாரைக்குச் சென்ற போது ஜே.வி.பி ஆதரவாளர்கள் சிலர் பிரதமரைத் தாக்கமுற்பட்டதுடன்,விகாரையின் பிரதம பிக்குவையும் தாக்கினர்.

இதனையடுத்து, தாக்குதலில் சம்பந்தப்பட்ட ஜே.வி.பியின் ஆதரவர்களான ஆர்ப்பாட்டக்காரர்களில் 7 பேரை ஜப்பானியப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். இதன்போது அவர்கள அனைவரும் சட்டவிரோதமாக ஜப்பானில் தங்கியிருந்தவர்கள் எனத்தெரியவந்தது.

இதன் அடிப்படையில் ஜப்பானில் சட்டவிரோதமாக விசா முடிந்த பின்னர் தங்கியிருக்கும் இலங்கையரைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சடடவிரோதமாக ஜப்பானில் தங்கியிருப்போர் உடனடியாக நாடுகடத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

அமெரிக்காவினால் கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து

# இஸ்ரேல் — பலஸ்தீன உயர்மட்டப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன

(ரெல்அவிவ்)

இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கான உயர்மட்ட பாதுகாப்புப் பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த ஒரு வார காலத்திற்குள் இப்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் 50ற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை உடன் நிறுத்துவதற்கான உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுத்ததை அடுத்து இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பேச்சுவார்த்தையில் பலஸ்தீனப் பாதுகாப்புப்பிரிவின் பிரதம அதிகாரி மொஹமட் த∴ரான் மற்றும் இஸ்ரேலிய இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

எனினும் இப்பேச்சுவார்த்தைகளின் போது இரு தரப்பினருக்கு மிடையேயான வன்முறைச் சம்பவங்களை நிறுத்துவது குறித்து எந்தவொரு முடிவும் இதுவரை எட்டப்படவில்லை என இஸ்ரேல் பலஸ்தீன செய்திகள் தெரிவிக்கின்றன. (க-2)

# அஸாம் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு ஒன்றரை லட்சம் பேர் இடம் பெயர்வு

(புதுடில்லி)

இந்திய அஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் ஒன்றரை லட்சம் மக்கள் தங்களது வீடுகளை இழந்துள்ளனர். ஏறத்தாழ 130 கிராமங்கள் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக கைல்கண்டி மற்றும் தீமாஜி ஆகிய மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்கள் தொடர்ந்து வரும் கடும்மழையினால் இப்பகுதிகள் பாதிப்புக்குள்ளாகி உள்ள என்றும் பிரமபுத்ரா ஆற்றின் கிளை நதிகள் அபாய கட்டத்தை எட்டியுள்ளதாகவும இதே நிலைதொடர்ந்தால் படையினர் உதவிக்கு அழைக்கப்படுவார்கள் எனவும், அஸாம் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் அஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 4 மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# முத்தரப்பு இரகசியப் பேச்சில் வடகொரியாவுக்கு முக்கியத்துவம்

(ஹனாய்)

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரிய இராஜதந்திரிகளுக்கிடையே நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளில் வடகொரியா குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வியட்நாம் தலைநகர் ஹனாயில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது தங்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் வடகொரியா கொண்டுள்ள உறவுகள் மற்றும் அதன் நடவடிக்கைகள் மூலம் மிகவும் குழம்பிப் போயுள்ளதாக மேற்குறிப்பிட்ட நாடுகளின் இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டத்தினை நிறுத்திக் கொள்வதில் காட்டிவரும் தயக்கமே இதற்கு முக்கிய காரணம் என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் கிழக்காசிய பசுபிக் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளர், தென்கொரியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜப்பானுக்கான ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தனது பாதுகாப்பை முன்னிட்டும் ஏனைய நாடுகளை எச்சரிக்கும் வகையில் அணுவாயுதத் திட்டம் தமக்கு அவசியம் என வட கொரியா குறிப்பிட்டுள்ளது. (உ-2)

# போப்பாண்டவரை விமர்சித்த ஜெயலிதா மீது கண்டனக் கணைகள் எழுந்துள்ளன



(புதுடில்லி)

போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை கடுமையாக விமர்சித்துள்ள தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாமீது கடுமையான கண்டனங்கள் எழுந்துள்ளன. மதமாற்றத்தடைச் சட்டங்கள் மதச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவே அமையுமென அண்மையில் போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கருத்து வெளியிட்டிருந்ததை அடுத்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடுஞ்சொற்களால் விமர்சித்திருந்தார். அத்துடன் மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து விமர்சிப்பதற்கு போப்பாண்டவருக்கு எந்தத் தகுதியோ உரிமையோ இல்லை யெனவும் கூறியுள்ளார். இது குறித்து தமிழக மதகுருமார்களும் கிறிஸ்தவ மக்களும் பெரும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதுடன் தமது கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பிற கட்சியினரை இதுவரைத் தாக்கிப்பேசி வந்த ஜெயலலிதா தற்போது உலகின் முக்கிய தலைவர்களையும் தாக்கிப் பேச ஆரம்பித்துள்ளார் என்று தமிழக விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார். (க-2)

# இந்தியா - பாகிஸ்தான் பேச்சுக்கான சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(தெஹ்ரான்)

பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலை இன்னும்எழவில்லைஎன இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானினுள்ள படைத்துறைப் பயிற்சி கல்லூரியில் நேற்று முன் தினம் ஆற்றிய விசேடஉரையின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எல்லைதாண்டிய பயங்கரவாதத்தினை பாகிஸ்தான் நிறுத்தினால் மட்டுமே அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற நிலைப்பாட்டிலே இந்தியா உள்ளது. ஆனாலும் இதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரைதென்படவில்லை என்று சுட்டிக்காட்டிய பாதுகாப்பு அமைச்சர் இரு நாடுகளுக்கு மிடையே பேருந்து மற்றும் தொடருந்து சேவையை இயக்குவது தொடர்பான ஆலோசனைகள் நடத்தப் பட்டு வருகின்றபோதிலும் இந்த முயற்சிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வழி வகுக்காது என்று கூறியுள்ளார். இதேவேளை அங்கு தனது நாட்டு படைபலம் குறித்து கருத்து வெளியிட்ட அவர் உலகின் தலை சிறந்த படையினராக இந்தியப் படையினர் விளங்குகின்றனர்.

இவர்கள வல்லமையிலும் துணிவிலும் நேர்மையிலும் உறுதியுடன் செயற்படுபவர்கள் என்று பெருமையுடன் கூறியுள்ளார். (க-2)

## எயிட்ஸ் வைரசின் மூலம் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

எயிட்ஸ் வைரஸ் தொற்று முதன்முதலில் ஆபிரிக்க குரங்குகளையே தாக்கியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக எயிட்ஸ்நோய் ஆராய்ச்சியாளர்களினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எயிட்ஸ் நோய் தொற்றுள்ள குரங்கின் இறைச்சியினை உட்கொண்ட மனிதர்களுக்கே அடுத்ததாக இந்நோய் தொற்றியுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-2)

# மியான்மார் பொருட்களுக்கு அமெரிக்காவில் தடைவிதிப்பு

(வாஷிங்டன்)

மியான்மார் நாட்டிலிருந்து எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்வதற்கு தடைவிதிக்கும் தீர்மானம் ஒன்றை அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

மியான்மரின் ஜனநாயக உரிமைக்காக போராடிவந்த எதிர்க்கட்சித் தலைவி ஆங்ஷான் சூகியை இராணுவ ஆட்சியாளர்கள் கைது செய்ததைக் கண்டித்தும் சூகியின் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்தும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை மியான்மார் அரசிற்குச் சொந்தமான அமெரிக்காவிலிருக்கும் சொத்துக்களும், முடக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது, எனினும் அமெரிக்காவின் இந்த தடைவிதிப்புக் குறித்து மியான்மார் அரசு இதுவரை எந்தக் கருத்தினையும் வெளியிடவில்லை. (க-2)



அமெரிக்காவின் மைனே என்ற இடத்தில் ஓய்வெடுக்கச் சென்ற அதிபர் புஷ், தான் பிடித்த மீனை மீண்டும் நீரிலேயே விடும் காட்சி

# டாக்காவிலுள்ள ஐ.நா அபிவிருத்தித்திட்ட அலுவலகம் மீண்டும் இயங்குகின்றது

(டாக்கா)

பங்களாதேசின் சிற்றஹொங் மலைப் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் தனது அலுவலகத்தை மீண்டும் திறந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இயங்கிவந்த இந்த அலுவலகத்தில் பணியாற்றி வந்த 3வெளிநாட்டவர்கள் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டனர். இதனையடுத்து இந்த அலுவலகத்தினை உடனடியாக மூடும்படி ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளினால் உத்தரவிடப்பட்டது. எனினும், தற்போது ஏற்பட்டுள்ள தேவைகருதி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திதிட்டத்தின் மூடப்பட்ட அலுவலகத்தை மீண்டும் திறக்குமாறு ஐ.நா அதிகாரிகள் கேட்டுக்கொண்டதை அடுத்து இவ் அலுவலகம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (க-2)

# ஜூலை 17ஆம் திகதிக்குள் ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்கள் வெளியேறவேண்டும்

## முன்னாள் அதிபர் கடிதத்தில் தெரிவிப்பு

(நியுயோர்க்)

ஈராக்கில் உள்ள வெளிநாட்டவர்கள் அடுத்த மாதம் 17ஆம் திகதிக்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று சதாம் காலக்கெடு வித்தித்துள்ளார்.

அமெரிக்கக் கூட்டுப்படையினரின் ஈராக் மீதான தாக்குதலையடுத்து அதிபர் சதாம் ஹூசைன் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் சதாமினால் எழுதப்பட்டுக்கையெழுத்திடப்பட்டதாகக் கருதப்படும்மிரட்டல் கடிதமொன்றை அல்குத்ஸ் அல் அராபி என்ற அரபு நாளிதழ் செய்தியாக வெளியிட்டுள்ளது.

அக்கடிதத்திலேயே மேற்குறிப்பிடப்பட்ட விடயம் காணப்பட்டது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, தன்னால் விதிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்கள் வெளியேற மறுத்தால் அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தப்படும். அந்த நாடுகளின் விமானங்கள் தகர்க்கப்படுமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், ஈராக்கில் தற்போதுள்ள வெளி நாட்டவர்கள் நயவஞ்சகமான முறையில் நாட்டுக்குள் நுழைந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இதேவேளை, சதாமினால் எழுதபபட்டது எனக் கூறப்பட்ட இக்கடிதம் குறித்து பல்வேறு கருத்து வேறுபாடு நிலவுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-2)

# ஈராக் எண்ணெய் குழாய்கள் மீது சதாமின் ஆதரவாளர்கள் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கின் எண்ணெய்க் குழாய்களை சதாமின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் வெடிவைத்து தகர்த்துள்ளனர்.

ஈராக்கின எண்ணெய் வளம் மிகுந்த இடமான பெய்ஜியில் உள்ள எண்ணெய்க் குழாய்களே இவ்வாறு தகர்க்கப்பட்டுள்ளன. இவை தற்போது தீப்பற்றி எரிந்து கொண் டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அமெரிக்கர்கள் ஈராக்கிலிருந்து துருக்கி வழியாக எண்ணெய் ஏற்றுமதி செய்வதனை தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென சதாமின் ஆதரவாளர்கள் சிலர் கூறியுள்ளனர். (க-2)

ஒலித்தக்கால் என்னாம் உவரி
எலிப்பகை
நாகம் உயிர்பக் கெடும்.
– குறள்

## வலம்புரி

# போர்முரசு கேட்கிறது

சமாதானம் கிடைக்குமென நம்பியிருந்தவர்கள் திணுக்குற்றுப் போயுள்ளனர். மீண்டும் யுத்தமென்ற ஏக்கத்தோடு வாய் திறந்து எதுவுமே பேசவழியின்றி மக்கள் பிரமைக்குள் சிக்குண்டு போயுள்ளனர்.

ஆம், விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் சர்வதேசக் கடல்பரப்பில் வைத்து இலங்கைக் கடல் படையினரால் தாக்கியழிக்கப்பட்டதை அடுத்து சமாதானத்தின் மீதான நம்பிக்கை அற்றுப் போய் விட்டது .

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றாமையும், சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருந்தமையும் சமாதானத்திற்கு ஊறு விளைவித்து விடுமோஎன்ற ஏக்கத்துடன் இருந்த மக்களுக்கு கப்பல் தாக்கியழிக்கப்பட்டசெய்தி தலையில் இடி விழுந்தது போல் உள்ளது.

யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வேளையில், துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றனவெனில் அது யுத்த நிறுத்தமாக இருக்க முடியாது, கப்பலை தாக்கியழித்த போது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கடலில் குதித்த 12 போராளிகளையும்(மாலுமிகள்)தாம் கைது செய்யவில்லையெனக் கடற்படை கூறுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

கப்பலைத் தகர்த்த கடற்படையே 12 போராளிகளின் உயிருக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும்-இதை விடுத்து 12 போராளிகள் பற்றி எமக்கு எதுவும் தெரியாது என வெறும் வார்த்தைகளால் கூறிவிடுவது மீண்டும் யுத்தத்திற்கே வழிவகுக்கும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்படாமல் பாதுகாக்கும் பொறுப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு உரியதாகும் இதனைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சரியான முறையில் மேற் கொள்ளத்தவறின் நிலைமை கட்டுக்கடங்காமல் போவதுடன் இருதரப்பும் மாறிமாறிப் பதில் நடவடிக்கையில் ஈடுபடமுடியும்.

குறிப்பாக, கப்பலிலிருந்து குதித்த 12 போராளிகளையும் தாம் கைது செய்யவில்லை எனவும், அதுபற்றி தமக்கு எதுவுமே தெரியாது எனவும் கடற்படையினர் கூறுவது போல் விடுதலைப்புலிகளும் இராணுவத்தைக் கைது செய்து விட்டு, எமக்கு அது பற்றி எதுவுமே தெரியாது எனக்கை விரித்தால் நிலைமை எப்படியிருக்கும் என்பதை படைத்தரப்பு உணர்ந்து கொள்ளத் தவறினும் அரசாங்கமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உணர்ந்து கொள்வது காலத்தின் தேவையாகும்.

ஏனெனில், தற்போது சமாதானம் என்ற ஒலிப்பு மெல்ல மெல்லக் குறைந்து வர போர் முரசின் ஒலியே காதுகளில் ஒலிப்பது போன்ற பிரமையில் மக்கள் உள்ளனர்.

# இளம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பொது நிறுவனங்களின் பங்களிப்பு தேவை

## அமைச்சர் தி. மகேஸ்வரன் எடுத்துரைப்பு

(பருத்தித்துறை)

''பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம் கலை, கலாசார, சமயக்கல்வி, விளையாட்டுத்துறை போன்ற சகல துறைகளிலும் சிறந்த சமூகப் பணியாற்றி வருவது பாராட்டப்பட வேண்டியதாகும். இக்கலை மன்றத்தின் பணிகள் மேலும் அபிவிருத்தி அடைய உதவிகள் வழங்கப்படும்''



மேற்கண்டவாறு, பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்துக்கு விஜயம் செய்த இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். கூட்டம் கலைமன்றத் தலைவி திருமதி சூரியகுமாரி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்;

எமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் சிறப்புறுவதற்கு பொது சேவை நிறுவனங்கள் கலை, கலாசார, கல்வி, சமய, விளையாட்டுத் துறை, பொருளாதார அபிவிருத்தித் துறைகளில் முன்னின்று செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். இன்றைய நிலையிலே இச்செயற்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன. இதற்குப் பல்வேறு துறையினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்த ஞானசம்பந்தர் கலை மன்றம் மேலும் அபிவிருத்தி அடைய இப் பகுதி மக்கள் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என்றார்.

இக்கலை மன்ற அபிவிருத்திக்கு ஒருலட்சம் ரூபா எனது அமைச்சு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு லட்சம் ரூபா கணனி, றோனியோ இயநதிரங்கள் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படவுள்ளது.

இங்குள்ள கலையரங்கு திருத்திப் புனரமைக்கப்படுவதற்கு தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்படவுள்ளது. இக்கலை மன்றத்தின் சிறந்த சமூகப்பணிகளால் எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வு சிறக்கவேண்டும் என்றார். மேலும் பிரமுகர்கள் பலர் உரையாற்றினர். (க-52)

# அரச வைத்தியர்கள் மீண்டும் இன்று முதல் வேலை நிறுத்தத்தில்

(கொழும்பு)

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அரச வைத்தியர்களின் வேலை நிறுத்தத்தை மீண்டும் இன்று காலை 8 மணி முதல் ஆரம்பிப்பதற்கு அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை வேலைநிறுத்தம் தொடர்ச்சியாக இடம்பெறும் என்று அவர் மேலும் கூறினார்.

அரசாங்கம் தங்களது கோரிக்கைக்கு உரிய கவனம் செலுத்தாத காரணத்தினால் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப்போவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை வைத்தியர்களின் கோரிக்கை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் தாம் கலந்துரையாட இருப்பதாகவும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னராக எந்தவித முடிவையும் தாம் எடுக்க முடியாது உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் பி.தயாரத்தின தெரிவித்துள்ளார். (வ-3)

### விடுதலைப்புலி உறுப்பினர்

# கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களிலும் ஊடுவியுள்ளனர்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் சேர்ந்த உறுப்பினர்கள் கொழும்பு உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் சட்டவிரோதமாக ஊடுருவி இருப்பதற்கான தகவல்கள் கிடைத்திருப்பதாக பாதுகாபபு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு பிரிவினர் விழிப்பாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை தாங்கள் அறிந்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர் வெறுமனே தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆயினும் அவர்களை தாங்கள் கைது செய்யப் போவதில்லை என்றும் கைது செய்தால் அவர்களின் நடவடிக்கைகளை உரிய முறையில் அறிந்துகொள்ள முடியாமல் போகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-3)

### தினசரி தியானம்

# பெண்மை

சமுதாயத்தில் ஒருபாதியாக உள்ள ஆடவர் மட்டும் ஆன்மீகத்தால் உந்தப்பட்டு வழிகாட்டப்பட்டு செல்கிறார்கள் என்பது ஒரு பறவை ஒரு சிறகினால் மட்டும் பறப்பது போன்றது ஆகும். அப்பறவை ஓர் அங்குலம் கூட முன்னேறிச் செல்ல முடியாது. இது போல ஆணும் பெண்ணுமாகிய இருவரும் ஆன்மீக வாழ்க்கை நடத்தும் போதுதான், அவர்கள் தைரியத்துடனும் பெருமுயற்சியுடனும், பெரிய இலட்சிய வீடான வீடுபேற்ற நோக்கி முன்னேறிச்செல்ல முடியும்.

தாயானவள் வாழ்க்கையின் உண்மையான நோக்கம் எது என்பதை உணர்ந்து தன் மக்களை ஆன்மீக வாழ்க்கையில் வாழச்செய்து விட வேண்டும். தன் செல்வாக்கால் தன் கணவரையும் அதே வாழ்கையை மேற்கொள்ளச் செய்ய வேண்டும் இப்படிப்பட்ட ஆன்மீக வாழ்கை குடும்பத்தினரைத் தேவர்களும் வாழ்த்துவார்கள்.

சுவாமி சிவானந்தர்

# தடாகத்தில் மூழ்கி இரு சிறுவர்கள் பலி

(கொழும்பு)

காலி தலாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வழிபாட்டுத் தலம் ஒன்றில் உள்ள நீர்த்தடாகத்தில் மூழ்கி இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வழிபாடுகளை நடாத்த வருவோரின் நலன்கருதி அமைக்கப்பட்டிருந்த தடாகத்திலேயே இவர்கள் மூழ்கி உயிரிழந்ததாக காலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

# வடக்குக் கிழக்கு புனர்வாழ்வுநிதி உலக வங்கி ஊடாக ஒதுக்கப்படும்

## நிதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கிடைத்த சகல நிதியுதவிகளும் உலக வங்கியின் ஊடாகவே ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை பயனளிக்கக்கூடிய வகையில் முதலீடு செய்வதற்கான புதிய திட்டம் ஒன்றை தாமும் பிரதமரும் இணைந்து அமைக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கிற்கான விசேட நிர்வாக அமைப்பு ஒன்றை அமைத்து அதன் ஊடாக வடக்குக் கிழக்கின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஏனைய பிரதேசங்களுக்கான அபிவிருத்திகளும் விசேட அமைப்புகள் ஊடாகவே மேற்கொள்ளப்படுமெனவும் இது இரண்டு கட்டமைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் இரு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அழிவுற்ற பிரதேசங்களை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து கட்டி எழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-3)

# கணனிப் பயிற்சிக்கான விண்ணப்பம்

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கற்ற மாணவர்களுக்கும் மற்றும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்குமான கணனிப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் இணைய விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-37)

# இலவச கணனிப் பயிற்சி

(திருநெல்வேலி)

தமிழர் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கத்தின் பருத்தித்துறை அலுவலகத்தில் இன்று காலை 10மணிக்கு யுவதிகளுக்கான இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. இந்தக் கணனிப் பயிற்சி வகுப்பில் இணைய விரும்புவோர் இன்று காலை நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கு நேரில் சமுகந் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.(வ-43)

# வணிக தீபம் வெளியீடு

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரிய கலாசாலையின் வணிக மாணவர் மன்றத்தின் ''வணிக தீபம்'' நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.30மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தமிழீழக் கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரரும், இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாலசுப்பிரமணியமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-3-42)

### சுபத்திரன் படுகொலை சம்பவம்

# காவலாளிகள் இருவருக்கும் 23ஆம் திகதிவரை விளக்கமறியல்

## நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் இரவு, பகல் காவலாளிகள் இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.நகர மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் த. சுபத்திரன் மீதான துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இப்பாடசாலையின் காவலாளிகள் இருவரும் நேற்று நீதிவான் முன்னிலையில் யாழ். பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப் படுத்தப்பட்டதையடுத்தே அவர் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து சந்தேகத்தின் பெயரில் வேறு எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கட்டடத் தொகுதியொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டதாலேயே கவலாலிகள் இருவரும் கைது செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4)

# 12 போராளிகளுக்கும் ஆபத்தாயின் அதற்குக் கடற்படையே பொறுப்பு!

## சு.ப. தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவிற்குக் கடிதம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான எண்ணெய்க் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையும், அக் கப்பலில் பயணித்த 12 போராளிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ளகள நிலைமைகளை விபரித்தும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சு.ப. தமிழ்ச்செல்வன் அனுப்பி வைத்த அக் கடிதத்தின் விபரம் வருமாறு:

**நடுவப் பணியகம்,**
**அரசியல்துறை**
**தமிழீழ விடுதலைப்புலிகள்**

**15.06.2003**

**தலைவர்,**
**போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு,**
**விடயம்:தமிழீழ விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் M.T. SHOSHIN சர்வதேசக் கடல் பரப்பில் சிறிலங்கா கடற் படையால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை.**14.06.2003 காலை இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாகவும் அது குறித்து உங்களுக்கு நாங்கள் அனுப்பிய தகவல்களில் பின்னர் ஏற்பட்ட திருப்பங்கள் தொடர்பாகவும் சிறிலங்கா கடற்படையினரின் சட்ட விரோதமான நடவடிக்கைகள் குறித்த தரவுகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறோம்.

கிழக்கு கரையிலிருந்து 265 கடல் மைல் தொலைவில் (1147N. 8431E) இக்கப்பல் சிறிலங்கா கடல் படையினரால் இடை மறிக்கப்பட்டு பரிசோதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டது காலை 7.00 மணியளவில் இக்கோரிக்கை விடப்பட்ட பொழுது அதற்கு இணங்கிய கப்பலின் கப்டன் இத்தகவலைச் சமாதானச் செயலயகத்துக்கு அறிவித்திருந்தார். உடனடியாக இது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. காலை 7.30 மணியளவில் **P701,P330,P332,P341,P340** ஆகிய இலக்கங்களைக் கொண்ட சிறிலங்கா கடற்படைப் படகுகள் எங்கள் கப்பலை நோக்கி வந்தது. 1000 மீற்றர் தூரத்திலிருந்தபடி தாக்குதலைத் தொடங்கின. சில நிமிட நேரத்தாக்குதலின் பின் கப்பலில் இருந்தோரை உயிர்காக்கும் படகுகளைப் பாவித்து கடற்படைக்கப்பலில் ஏறும்படி பணிக்கப்பட்டது. மாலுமிகள் அதற்கிணங்க நடந்தனர்.

நாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை இந்த இடத்துக்கு விரைந்து விசாரணை செய்வதுடன் எங்கள் உறுப்பினர்களைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொண்டோம். இதன் பிரகாரம் சிறிலங்கா கடல் படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அங்கத்தவர்களை 110 கடல் மைல் தூரத்திலுள்ள கடற்பிரதேசத்திற்கு கூட்டிச் சென்று அங்குதான் எங்கள் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதென கூறியிருக்கின்றனர். அங்கு கப்பல் மூழ்கடிக்கப்பட்டமைக்கான தடயங்கள எதனையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களால் காணமுடியவில்லை தரையிலிருந்து 265கடல் மைல் தூரத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எங்கள் கப்பலைத் தாக்கி மூழ்கடித்துவிட்டு 110 கடல் மைல் தூரத்தில்தான் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதெனவும் சர்வதேச கடற்பரப்பில் அல்லாது தங்களுடைய கடலாதிக்க பகுதியில்தான் நடைபெற்றிருக்கிறது என்ற புனைகதையை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை நம்ப வைக்க முயன்றிருக்கிறார்கள். சிறி லங்கா கடற்படையின் வாததை அப்படியே ஏற்றுக் கொள்வதாயினும் அங்கு இன்னொரு முக்கிய விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது தாக்குதலைத் தொடங்கு முன்னரே சிறிலங்கா கடற்படையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் கொடுக்க வில்லை என்பது இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயமாகிறது. இவை எல்லாவற்றிலிருந்தும் துல்லியமாக புலனாவது என்னவெனில், முன்பு மார்ச் 2003 இல் நடந்தது போலவே சிறிலங்கா கடற்படையினர் சம்பவம் நடந்த பிரதேசத்தை தாக்குதலை நியாயப்படுத்துவதற்கு வாய்ப்பாக மாற்றியிருக்கிறார்கள் என்பதே.

இந்தப் பொய்மையை நாம் அறிந்த காரணத்தால் உண்மையாகச் சம்பவம் நடந்த இடத்தை துல் லியமாக விளக்கும் விதத்திலான பாகை எண்ணிக்கையில்(1147N. 8431E) காட்டியிருந்தோம் இதன்படி சிறிலங்கா கடற்படை போர் நிறுத் தக்கண காணிப புக் குழு அங்கத்தவாகளை சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டிச் செல்வதாகக் கூறி தங்கள் கலத்தில் ஏற்றிச்சென்றிருக்கின்றனர் பாதி வழியில் கடற் கொந்தழிப்பு என காரணம் கூறி இந்த இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லாமல் திரும்பியுள்ளனர். ஓர் எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடத்தில் சாதாரணமாக எதிர்பார்க்க கூடிய கடலில் மிதக்கும் எண்ணெய்க்கசிவு தங்களைக் காட்டிக் கொடுத்து விடும் என்ற அச்சத்தினால் போலும் அந்த இடத்துக்கு கூட்டிச் செல்லாமல் தாமதத்தை ஏற்படுத்தினால் எண்ணெய்க் கசிவு அகன்று விடுமென்ற உள்நோக்கத்துடன் பயணத்தை இடைவழியில் நிறுத்தி திரும்பியிருக்கிறார்கள் உண்மையில் சிறிலங்கா கடற்படையினர் தடயத்தை மறைக்கும் ஓர் உத்தியை கையாண்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை ஏமாற்றியிருக்கிறார்கள்

சிறிலங்கா கடற்படையினர் சர்வதேச கடற்பரப்பில் சர்வதேச கடற் சட்டங்களை மீறும் விதத்தில் எமது கப்பலைத் தாக்கியழித்தது சம்பவம் 110 கடல் மைல் தூரத்தில் நடந்தது என ஓர் கதையைப் புனைந்தது எங்கள் போராளிகளை சட்ட விரோதமாக கடத்திச் சென்றுவிட்டு அதனை மறுப்பது,தடயங்களை அழிந்து போவதற்கான தாமதிக்கும் உத்தியை கடைப்பிடித்தது போன்ற தான் தோன்றித் தனமான செயல்கள் குறித்து எங்கள் பலமான எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புகிறோம் எங்கள் கலத்தை சட்ட விரோதமாக தாக்கியழித்தமைக்கும் எங்கள் போராளிகளைக் கடத்திச் சென்றமைக்கும் சிறிலங்கா கடற்படையே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனக் கூறும் அதே வேளை மேலே விபரிக்கப்பட்டிருக்கும்பகைப் புலனின் அடிப் படையில் அர்த்தமுள்ள விசாரணைகளை உடனடியாகத் தொடங்கி எங்கள் போராளிகளின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலை மிக விரைவாக எங்களுக்குத் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

சிறிலங்கா கடற்படையினர் சமாதான முயற்சிகளை குலைப்பதற்கான ஒரு சதித்திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என நாம் அச்சம் கொள்வதுடன் அவர்களது நடவடிக்கை காரணமாக எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு சிறிலங்கா கடற்படையே பொறுப்பேற்க வேண்டுமென உங்களுக்கு கூறக்கடமைப்பட்டுள்ளோம். இந்தச் சம்பவத்தின் காத்திரத்தையும் எங்கள் போராளியின் உயிர்பாதுகாப்பு தொடர்பான எங்கள் கரிசனையும் கருத்தில் கொண்டு இது தொடர்பாக விரைவான பதில் ஒன்றைத் தரும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்,
திரு.சு.ப. தமிழ்ச்செல்வன்,
பொறுப்பாளர்,
அரசியல்துறை.

---

### விடுதலைப் போராட்டத்தை...

கரவாதிகள் அல்ல என்பதனை உணர்த்தியதையும், உண்மையான பயங்கரவாதிகள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்திய முறையியையும், நாங்கள் அறிவோம். இதற்காக இந்தப் 16 மாதங்கள் சிங்கள அரசும் படைகளும் செய்த அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும், அழிப்பு நடவடிக்கைகளையும் இழக்கக் கூடாத இழப்புக்களையும் நீங்கள் பொறுத்து மௌனமாக இருந்தீர்கள். இதற்கு முன் கண்ணீரும் சிந்தி காத்து வளர்த்து வந்த விடுதலைப் போரை இடைநிறுத்தி விட்டுக் கொடுக்க முடியாத, விட்டுக் கொடுக்கக் கூடாத இடங்களெல்லாம் விட்டுக்கொடுத்துப் போனீர்கள். ஆனால் சிங்கள அரசுப் படைகளும், ஏன் உலக நாடுகளும் கூட எமது இனத்தின் தன்மானத்தில் சுயகௌரவத்தில் சுதந்திர உணர்வில் கத்தி வைத்துவிட்டார்கள். எங்களை ஏமாளிகளாக எண்ணி செயற்பட முற்பட்டுவிட்டார்கள். நெடுந்தீவுப் பகுதியில் எமது போராளிகளின் உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள். பண்பாட்டின் உயிர்நாடியாய் ஈழத்தின் பிறப்பிடமாய் நின்ற எம் பெண் போராளிகளை சிங்களப் படை ஆடைகளைக் கிழித்து இடுப்புப் பட்டிகளை அறுத்து அவமானப்படுத்திய போதும் அமைதியாக இருந்தீர்கள்.

காஞ்சிரங்குடாவில் உங்கள் உயிராய் மதிக்கும் மக்களை அதிரடி படையினர் நாயிலும் கேவலமாய் சுட்டுக் கொன்ற போதும் பொறுமை கடைப்பிடித்தீர்கள். எமது விடுதலைப் போரில் முதுகெலும்பாய் வளர்ந்து நிற்கும் கடற்புலிகள் படையின் கப்பலையும், அதில் பயணித்த கப்பல் கப்டன் சிலம்பரசன் உட்பட 11 போராளிகளையும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கி அழித்த போது சகித்துக் கொண்டீர்கள்.

உங்கள் மௌனத்தை அமைதியை பொறுமையை சகிப்பை சிங்கள அரசும் படைகளும் புரிய மறுத்தார்கள். இது மட்டுமல்ல புரிந்துணர்வு உடன்படிக்கையையும் அமைதிக் காலத்தையும் பயன்படுத்தி எமது பலத்தின் ஆணி வேரில் கைவைக்க தொடங்கியுள்ளார்கள். அதன் வெளிப்பாடாகவே கடந்த 14ம் திகதி சனிக்கிழமை மீண்டும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எமது கப்பலையும் தாக்கி மூழ்கடித்து அதில் பயணித்த போராளிகளையும் ஂகது செய்துள்ளார்கள்.

இதற்குப் பின்பும் சர்வதேச சமூகத்திடமோ சிங்கள அரசிடமோ நீதியும் நியாயமும் வேண்டி நிற்கும் அளவிற்கு நீங்கள் இருக்கக் கூடாது. இதுவரை நீங்கள்காட்டிய பொறுமையும், விட்டுக் கொடுப்பும் போதும். மானமும் சுயகௌரவமும் இழந்த மக்களல்ல உங்கள் மக்கள். இலட்சியதிற்காக உயிரைத் துச்சமாக மதிக்கும் பிள்ளைகளை தாம் நாங்கள் போருக்கு அனுப்பி வைத்தோம். இனியும் அனுப்பி வைப்போம் உங்கள் முடிவை மாற்றி இலட்சியப் பயணத்தின் பாதையை மீண்டும் உரம் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பலமாய் நாங்கள் இருப்போம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-5)

---

### இந்திய...

ஒன்றை வழங்கியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் உதவியையும் இலங்கை அரசு நாடியுள்ளது என கூறப்படுகிறது.

இது ஒரு புறம் இருக்க நேற்று முன்தினம் முல்லைத்தீவு சர்வதேச கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்திற்கும் இந்தியக் கடற்படைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என இந்தியக்கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்தியா தனது கருத்தை உடனடியாகத் தெரிவிக்கமாட்டாது என்று இந்திய இராணுவ இராஜீக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டும் உள்ளன.

(ம)

---

### புலி உறுப்பினர்...

செய்ததுடன் துப்பாக்கியால் தாக்கியும் உள்ளனர்.இச்சம்பவத்தின் போது எட்டிற்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸை நோக்கி படையினர் சுட்டதில் பஸ் பலத்த சேதத்திற்கு உள்ளானது.அத்துடன் அவ்பஸ்ஸில் பிரயாணம் செய்த மக்கள் சிதறி ஓடித்தப்பிக் கொண்டனர். இச்சம்பவம் நடைபெற்ற வேளை அவ்வழியால் வந்த மினி பஸ் சாரதி ஒருவரும் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் குறித்து உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப்புலிகள் தகவல் கொடுத்தனர். மாலை 6.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த கண்காணிப்புக் குழுவினர் நிலைமையை சமாளிக்க முற்பட்டனர்.

இதேவேளை தம்மை பொலிஸ் மட்டுமே சோதனை இட முடியும் எனவும் இராணுவம் தம்மை சோதனை இட அனுமதிக்க முடியாது எனவும் புலிகள் தெரிவித்தனர். இதனை அடுத்து பொலிஸார் சோதனை இட்ட போது புலி உறுப்பினர்களிடம் ஒரு சாரமும் சோப்புக்களுமே இருந்தன.

(ந-5)

---

### கல்லடியில்...

கைக் குண்டு ஒன்றையும் வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இக் கைக்குண்டு வீச்சில் மூவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வாழைச்சேனை நகரிலும் நேற்றுக் காலை கைக் குண்டு ஒன்று வீசப்பட்டதாகவும் இக் குண்டு வீச்சில் 6 பேர் காயமடைந்ததாகவும் இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து வாழைச் சேனையில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

(10)

---

## இசை நிகழ்ச்சியின்போது பாஷையூரில் கோஷ்டி மோதல்

(கொழும்புத்துறை)

பாஷையூரில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 15ற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்று பாஷையூர் அந்தோனியார் கோயிலுக்கு முன்பாக உள்ள மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை பார்வையிட வந்த இரு குழுக்களுக்கிடையே இம்மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இந் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் அடிதடியில் முடிந்தது. இதனை அடுத்து இசை நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது. இக் குழுவினர் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இதன் போது மைதானத்தில் கட்டப்பட்டிருந்த மின் விளக்குகள் சிற்றுண்டி வியாபாரிகளின் பொருட்கள் மற்றும் வாகனங்கள் என்பன அடித்து நொருக்கப்பட்டதுடன் அயலில் உள்ள வீடுகளும் வேலிகளும் இழுத்து எரிக்கப்பட்டது.

இதேவேளை இரு குழுக்களிலும் சுமார் 500ற்கும் மேற்பட்டோர் வாள்கள் கொட்டன்கள் மற்றும் ஆயுதங்களுடன் மோதலில் ஈடுபட்டனர்.(ந51)

---

## கொலைகளுக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களினதும், தமிழ் இயக்க உறுப்பினர்களினதும், கொலைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெறும் இத்தகைய கொலைச் சம்பவங்களை தடுத்து நிறுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கே உரியது. இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டுவது ஏற்கமுடியாது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் செயற்பட்டுவரும் புலி உறுப்பினர்கள் அனைவரும் எந்தவிதமான ஆயுதங்களும் இன்றி அரசியல் வேலைகளை செய்து வருகிறார்கள். இந்நிலையில் அவர்களினால் வன்முறைகளில் ஈடுபட முடியாது.

எனவே அரசாங்கம் இக்கொலைகளுடன் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளை கண்டறிய வேண்டும் என்று கூறியுள்ளனர். (6)

---

## தாலிக்கொடி திருடிய பெண் அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடியை அறுத்த பெண் மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். மேற்படி இச்சம்பவம் நேற்றைய தினம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருநாள் திருப்பலியின் போது ஆலயச் சூழலில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண்ணிடமிருந்து தாலிக்கொடி மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் விசாரணைக்காக அவர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ந-3)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.